# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 1-10-61 ஞாயிறு | இதழ் 16


## சிங்களத்துக்கு பதில் ஆங்கிலம்!

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி வரும் சிங்கள பஸ் கண்டக்ரர்களிற் சிலர் தம் தாய் மொழியில் பிரயாணச் சீட்டு எழுதுவதைக் கைவிட்டுள்ளனர், ஓரளவு ஆங்கிலம் தெரிந்தவர்களான அவர்கள் சிங்களத்துக்குப் பதில் ஆங்கிலத்தில் சீட்டெழுத முன்வந்திருக்கிறுர்கள்.

யாழ்ப்பாணத்துககு இடமாற்றம் பெற்றுவந்த புதிதில் சிங்களத்திலேயே பிரயாணச் சீட்டை எழுதிக் கொடுத்தார்களேயாயினும், இது பிரயாணிகளால் எவ்விதம் வெறுக்கப்படுகின்றதென்பதை ஓரளவுக்கு அவர்கள் புரிந்துகொள்ள முடிந்தது. எனவே ஆங்கிலம் தெரிந்தவர்கள் உடனடியாக மொழிமாற்றத்தில் ஈடுபட்டிருக்கிறுர்கள். சிங்களத்தில் மட்டுமே எழுதத்தெரிந்தவர்கள் முக்கிய வீதிகளில் கடமையாற்றுவதிலிருந்தும் படிபடியாகக் குறைக்கப்பட்டு வருகிறுர்கள்.

### சர்வ தேசிய அரங்கிலிருந்து...

# சமசமாஜக் கட்சிக்குச் சாட்டை!

## பின்பற்றும் கொள்கை பிற்போக்கானது?

இலங்கைச் சமசமாஜக் கட்சிக் கோட்டைச் சுவரில் பெரும் வெடிப்பொன்றை இப்போது சிலகாலமாக அரசியல் அவதானிகள் எதிர்பார்த்துக்கொண்டுவந்தார்கள். அதற்குச் சூசகமாக கட்சிக்குள் இருக்கும் முக்கியதலைகளிடத்தில் நிலவி வந்த கருத்து வேற்றுமைகளையும் —கோஷ்டிப் பூசல்களையும் சுட்டிக்காட்டினுர்கள். ஆனுல் கட்சிக்குள்ளிருந்த குமுறல், தற்சமயம் தற்காலிகமாக இரண்டு காரணங்களால் அமுங்கி இருப்பதாக தெரிகிறது. தீவிரப் போக்குள்ள எட்மன் சமரக்கொடி குழுவினரின் பலத்தை டாக்டர் என். எம். குழு பூரணமாக தெரிந்துகொண்டு-அதனுல் பணிந்துமுன்பிருந்ததுபோன்ற 'மதிற்பூனை' வாதத்தை விட்டுவிட்டு, ஓரளவு அரசாங்கத்தை எதிர்க்க முடிவு செய்து இருக்கிறுர்கள். ல. ச. ச. கட்சி சிறிமாவின் ஆட்சியை வாயளவில் கண்டித்து, வோட்டளவில் ஆதரித்து பொதுமக்களுக்கு பம்மாத்துக் காட்டிய முறையை விட்டு விட்டு பட்ஜட்டின்போது அரசாங்கத்தை எதிர்த்தே வாக்களித்தது.

லங்காசமசமாசக் கட்சித் தலைமைப் பீடத்தை அதன் புதிய-அரசாங்க எதிர்ப்புக் கொள்கைக்குத் திருப்பிவிட்டதற்கு 'நாலாவது சர்வ தேசீயம்' என்ற பத்திரிகையில் வந்த செய்தியும் ஒரு காரணமாகலாம்!

அந்தச் செய்தியில் கண்டிருப்பதாவது:

''1960-ம் ஆண்டு தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பின்பு ல. ச. ச. கட்சி கடைப்பிடித்து வரும் அரசியல்பாதை-அதாவது பாராளுமன்றத்தில்பண்டாரநாயக்கா ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பது என்ற சமசமாசக் கட்சியின் முக்கிய கொள்கையை - ஆருவது உலக காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை.''(The F.I. wishes to recall that the Sixth World Congress disapproved of the political line adopted by the Lanka Samasamaj party following the Election defeat of March 1960 that is the parliamentarysupportofthe Bandaranayake Government, which still remains the general policy of the L. S. S. P.)

'நாலாவது சர்வ தேசியம்' என்ற இயக்கத்துக்கு பாரிசில் தலைமையலுவலகம் இருக்கிறதென்பதும் அந்த இயக்கத்தின் இலங்கைப் பிரிவாக லங்கா சமசமாசக் கட்சி விளங்குகிறதென்பதும் வாசகர்களுக்குத் தெரிந்ததே.

## தமிழிலே பரீட்சை; ஆங்கிலத்தில் விளக்கம்!

உள்ளூராட்சிப் பகுதியினரால் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் சமீபத்தில் நடாத்தப்பெற்ற தமிழ் சுருக்கெழுத்தாளர் பரீட்சையின் போது, பரீட்சாதிகாரி ஆங்கிலத்திலேயே தமது விளக்க உரைகளையும் குறிப்புகளையும் எடுத்துரைத்தார். ஆனுல் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பலருக்கு ஆங்கிலமே தெரியாதாம்!

தமிழர்கள்மட்டும் பங்குபற்றிய தமிழ் பரீட்சையொன்றின்போது தமிழில் பேச ஏன் மறுக்கப்பட்டதென்பதும் இதனுல் பரீட்சார்த்திகள் அடைந்த ஏமாற்றமும் மேலதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவிருக்கிறதென தெரிய வருகிறது.

மாணவர் கையில்

## தண்ணீர்ப் போத்தல்!

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள அநேக பாடசாலைகளில் பிள்ளைகள் தமது புத்தகங்களோடு தண்ணீர்ப் போத்தலையும் சுமந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கடும் தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக அப்பகுதிகளில் வீடுகளுக்குக் கூப்பனுக்குத்தான் தண்ணீர் கொடுக்கப்படுகிறது!



சென்ற வாரத்தில் யாழ்பபாணததுல நடை பெற்ற 'எழுத்தாளன் காதலி' நாடகத்தில் ஒரு காட்சி. [ விமர்சனம் 11-ம் பக்கம் ]

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

### 1-10 61 முதல் 7-10 61 வரை

**மேடம்:** குடும்பத்தில் சிறிய சச்சரவுகள் சில காணப்படுகின்றன. பிரயாசமும் அதிகமா இருக்கும். பிதாவழி பந்துக்களால் சங்கடங்கள் நேரிடலாம். ஆனல் சத்துரு ஜயமுண்டு. தேகசுகம்நன்ருகஇராது.

**இடபம்:** தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. நண்பர்கள் மூலமாகப் பலவித உதவி கிட்டும். ஆனுல் தேகசுகம் பாதிக்சப்படும். தொழில் ஸ்தானத்திலும் சிறு சங்கடங்கள் உண்டாகும். பொருள் விருத்தி உண்டு.

**மிதுநம்:** இளைய சகோதரரால் நன்மையுண்டு. மனதில் அமைதி நிலவாது. குடும்பத்தில் சில சச்சரவுகள் காணப்படுகின்றன. தேசுகத்தைப் பேணவும்.

**கடகம்:** பொருள் விருத்தியுண்டு. முன்தவறியவை அனுகூலமாகும். போட்டிகளைச் சமாளித்து முன்னேறமுடியும். நண்பர்கள் மூலமாகப் பல உதவியுண்டாகும்.

**சிங்கம்:** தேகசுகத்தைப் பேணவும். வயிற்றில் சிறு ரோகங்கள் காணப்படலாம். நீங்கள் விரும்பிய வண்ணம் விஷயங்களை ஒப்பேற்றுவது கஷ்டமாக இருக்கும்.

**கன்னி:** தேகத்தில் உஷ்ண சம்பந்தமாக ரோகங்கள் ஏற்படும். இனசன விரோதமும் காணப்படுகிறது. ஆனுல் பொருள் விருத்தியுண்டு. சத்துரு ஜயமும் ஏற்படும்.

**துலாம்:** அதிக பிரயாசத்துடன் காரியசித்தியுண்டு. நண்பர்களுடன் சிறு விரோதங்கள் ஏற்படலாம். கருமங்களைச் செய்யும்போது குறைகளும் கேட்க நேரிடும். தேகசுகவீனமும் உண்டு.

**விருச்சிகம்:** இடையருத யோசனை உண்டு. செலவினங்களும் அதிகமாகும். மாதுருவழிபந்துப் பீடை உண்டு. ஸ்திரீகள் மூலமாகக் குடும்பத்திற் கலகங்கள் ஏற்படலாம் முதலிரண்டு நாட்களையும் அவதானமாகக் கழிக்கவும்.

**தநுசு:** யோசனையும் பிரயாசமும் அதிகமாக இருக்கும். தேகசுகமும் சிறிது பாதிக்கப்படும். பொருள் விஷயத்தில் முன்னேற்றமுண்டு. பூமியாலும் லாபம் கிட்டும். செவ்வாய், புதன், வியாழன் வாரங்களில் சிறு சங்கடங்கள் நேரலாம்.

**மகரம்:** தொழில் விஷயத்தில் சிறிது முன்னேறம் காணப்படுகிறது பிரயாசமதிகமாக இருந்தாலும் கருமங்களில் வெற்றியுண்டு அன்னியர் மூலமாகப் பல உதவிகள் கிட்டும் வியாழன் பிற்பகல், வெள்ளி, சனி வாரங்களை அவதானமாகச் செலவிடவும்.

**கும்பம்:** கருமங்களில் தொடர்ந்து லாபம் கிட்டும். அன்னியர் மூலமாகப் பலவித உதவி உண்டு. தேகசுகத்தைப் பேணவும். குடும்பத்தில் சில சச்சரவுகள் காணப்படுகின்றன.

**மீனம்:** எதிர்ப்புகள் சில ஏற்பட்டாலும், அவற்றைச் சமாளித்து முன்னேற முடியும். தேகசுகம் சிறிது பாதிக்கப்படலாம். அலைச்சலும் அதிகமாக இருக்கும். ஆனுல் பொருள் விருத்தி உண்டு.


### சோதிடம்

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினுல் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினுல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.



## 'புதினம்'

### கொழும்பு விற்பனையாளர்.

கொழும்பு நகரம் முழுவதுக்கும் புதினம் விற்பனையாளராகக் கீழ்க்காண்பவர்களை நியமித்துள்ளோம்.

**தென்னவன் நூலகம்**

151, செட்டியார் தெரு, — கொழும்பு-11

கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள புதினம் விற்பனையாளர்கள் இனிமேல் மேற்படியாளுடனேயே தொடர்பு கொள்ளவும்.

விநியோகப்பகுதி நிர்வாகி,
புதினம்.


# கண்டதும்... கேட்டதும்...

### வேண்டாம், பட்டம் பதவி.

"ஹலோ! மிஸ்டர் மாயாவி! ஐக்கிய நாடுகள் பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷெல்ட் கொங்கோவில் அகாலமரணமெய்தியதால் அவருடைய பதவி காலியாக இருக்கின்றதாம். அதற்கு நீர் ஏன் விண்ணப்பிக்கக்கூடாது?" என்று ஒரு வாசகர் என்னைக் கேட்டிருக்கிருர்.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் எடிட்டர்தான் என்னை ஒழித்துக்கட்ட திட்டம் வகுக்கிருரோவென்றெண்ணினேன். மனுஷன்தான் எப்ப பார்த்தாலும் என்னைக்கரிச்சுக்கொட்டுகிருர். நான் ஏதாவது எழுதிக் கொடுத்தால் "ஏன் ஐயா, உமக்கு எழுதவே வராதோ? உதவாக்கரை விஷயங்களை குப்பைத் தமிழில் எழுதி ஏன் என் பிராணனை வாங்குகிறீர்?" என்கிருர். சம்பளம் போதாதென்ருல் "ஏன் என் கழுத்தை அறுக்கிறீர்?" என்கிருர். அப்படிப்பட்டவர் என்னை ஒழித்துக்கட்ட நினைக்கலாமல்லவா?

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் துருக்கியின் முன்னைநாட் பிரதமரும், ஜனுதிபதியும், திரு. ஹமர்ஷெல்டும் வேறுபேர்களும்பட்டம்பதவிக்கு ஆசைப்பட்டுகெட்ட கேடு போதாதா? நானும் பதவிக்கு ஆசைப்பட்டு "அவளை"த் தாலியறுக்கப்பண்ண வேண்டுமா?

எடிட்டர்மென்னியைப் பிடித்துத் திருகினுலும் அவரே தஞ்சம் என்றிருப்பதல்லால் ஏதொன்றறியேன் பராபரமே.

### யாரைத்தான் நோவது?

"கோதாரியிலை போவான், கொட்டைப்புளி ருத்தல் இரண்டு ரூபாயாம்" என்று விசாலாச்சியக்கா கடைக்காரனைத் திட்டினுள்.

அதைக்கேட்டுக்கொண்டிருந்த அவளுடைய கணவன், "எய்தவனிருக்க அம்பை ஏன் நோகிருய்? கடைக்காரன் புளியை மலிவாய் வாங்கினுல்தானே மலிவாய் விற்கமுடியும்? புளி இறக்குமதிநின்றுபோச்சு. அதனுலே கடைகளிலே புளி இல்லை. களவாக வாற புளி கருப்பட்டி விலை விற்குது" என்ருன்.

விசாலாச்சியக்காவுக்கு இந்த அரசியல் விவகாரமெல்லாம்புரியாது. கடைக்காரனைத் திட்டிப் பயனில்லையென்றுகணவன் சொன்னதால் கவுண்மேந்தை ஒரு பாட்டம் திட்டி ஓய்ந்தாள்.

"கவுண்மேந்தை ஏனணை ஆச்சி திட்டுருய்? புளி இறக்குமதிசெய்யும் சாட்டில் இங்குள்ள வியாபாரிகள் இலங்கைப் பணத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தார்கள். அதனுல், வங்குரோத்தாகிக் கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கம் புளி இறக்குமதியைத் தடைசெய்திருக்கிறது" என்று விளக்கினுன், அவருடைய அருமைப் புதல்வன்.

அதற்குமேல் யாரைத் திட்டுவதென்று விசாலாச்சியக்காவுக்குப் புரியவில்லை. யோசித்துப்பார்த்தால், புருஷனின் உழைப்பு போதாமலிருந்தால் தானே புளிக்கு இரண்டு ரூபாய் கொடுக்க முடியாமலிருக்கு! தொடுத்தாள் பாணத்தை புருஷன்மீது.

"வாய்க்கு ருசியாய்ச் சாப்பிடவும் வக்கணையாய்ப் பேசவும்தான் தெரியும். நாலுபேரைப்போல

(11 ம்-பக்கம் பார்க்க)

## தீபாவளிச் சேலைஅலங்காரம்!

## சிறந்த போட்டோவுக்கு பரிசு!

'புதினம்' தீபாவளிச் சிறப்பிதழில் பெண்களின் சேலை அலங்காரப் பக்கம் ஒன்று வெளியிடுகிறோம். அதற்கு அழகாகச் சேலை அணிந்த பெண்களின் போட்டோக்கள் தேவை. மிகச் சிறந்த ஒரு போட்டோவுக்கு முதல் பரிசும், மற்றும் பிரசுரத்துக்காக எடுக்கப்பட்ட மூன்று அல்லது நான்கு படங்களுக்குச் சன்மானமும் வழங்கப்பெறும்.

- படங்கள் 'போஸ்காட்' அளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
- படத்துடன் குறித்த பெண்கள் அணிந்துள்ள சேலையின் பெயர், நிறம் முதலிய விபரங்களும், அந்தச் சேலைக்கு ஏற்றதாக அவர்கள் தெரிவு செய்து அணிந்துள்ள சட்டையின் விபரமும், குறிப்பிடவேண்டும்.
- படங்களை 12-10-61 க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக, புகைப்படப் போட்டி, புதினம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு கீழே உள்ள கூப்பனுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

புகைப்படக் கலைஞர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம். குறித்த பெண்கள் மூலமாக இல்லாமல், புகைப்படக் கலைஞர் மூலமாக போட்டோ அனுப்பப்பெற்றுப் பரிசு கிடைக்குமானுல், குறித்த போட்டோக் கலைஞரின் படமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுக் கௌரவிக்கப்படும்.

**சேலை அலங்காரப் புகைப்படப் போட்டி.**

பெண்ணின் பெயர்: ..............................

முகவரி: ..............................

படத்தைப் பிரசுரிக்கச் சம்மதித்துக் கையொப்பம்:

..............................

புகைப்பட கலைஞரின் பெயர்: ..............................

முகவரி ..............................

பெண்களே படத்தை அனுப்பினுல் படக் கலைஞரின் பெயர் அவசியமில்லை.


### தேவை


இலங்கை முழுவதிலும் வெளிவேலை உத்தியோகத்தர்களாகக் கடமை ஆற்றக்கூடிய கண்ணியமும் செல்வாக்குமுடைய ஆண் பெண் இருபாலாரும் தேவை. 90 ரூபா சம்பளமும் கொமிஷனும் கொடுக்கப்படும். மலைநாட்டுப்பகுதி விண்ணப்பங்கள் விசேடமாகக் கவனிக்கப்படும்.

இந்தோ சிலோன் பெனிவிற் சொசைற்றி லிமிட்டெட்
கண்டி வீதி, கொடிகாமம்.

## தண்டனை பெற்றவள் சர்ச்சிலின் மகள்!

இங்கிலாந்து நாட்டின் முன்னைநாள் பிரதமரான வின்ஸ்டன் சேர்ச்சிலின் மகளான சாரா, புகழ்பெற்ற நாடக சினிமா நடிகை என்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். ஆனால், அவள் செய்த தவறான செயல்களுக்காகப் பலமுறை தண்டிக்கப்பட்டிருக்கிறாள். என்பது தெரியுமா? முன்னாள் பிரதம மந்திரியின் மகளாக இருந்தும், ஒரு முறையாவது அந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்ளவில்லையாம் அந்த நடிகை!

## 'டட்லி' சோதிடர்!




# திரை மறைவில்

### 'பொல்லு எங்கே?'

சபாநாயகர் திரு. ஆர். பொல்பொலை சாம்ராச்சிய பாராளுமன்ற மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்றிருக்கின்றாரல்லவா? அவர் போனதன்பின்பு முதன் முதலாகச் சனப்பிரதிநிதிகள் சபை கூடியபோது மிகவும் ருசிகரமான இச்சம்பவம் நடந்தது. சபை கூடும்போது செங்கோலும் சபாநாயகரும் ஊர்வலமாகச் சபைக்குச் செல்வதுண்டு. அதைச் 'சபாநாயகர் ஊர்வலம்' என்று அழைப்பார்கள். சபாநாயகர் இல்லாத சமயத்தில் உப-சபாநாயகர் அவருக்காகக் கடமையாற்றினாலும் சபாநாயகர் ஊர்வலத்தில் செல்லும் உரிமை அவருக்குக் கிடையாது.

சபாநாயகர் திரு. பொல்பொலை வெளிநாடு சென்றதன் விளைவாக உப-சபாநாயகர் திரு. கியூ பெர்னான்டோ சென்ற வாரம் சபை நடவடிக்கைகட்குத் தலைமை தாங்கினார். அன்று சபைலிகிதர்கள் இருவரும் நேரத்தோடு சென்று சபைக்குள் அமர்ந்து விட்டனர். அதைப் பார்த்த தற்காலிக தபாலமைச்சர் 'மகனுக்குப் போஸ்மாஸ்டர் வேலை தேடிக்கொடுத்த' திரு. ரி. பி. தென்னக்கோன் சபை இலிகிதரை வியப்புடன் பார்த்து "பொல்லைக் காணேமே! பொல்லு எங்கே?" என்று கேட்டார் செங்கோலையே 'பொல்லு' என்று குறிப்பிட்டார் அவர். சபை இலிகிதர் சிரித்துவிட்டு "பொல்லு இன்று தனியே வரும்" என்று 'மகனுக்குப் போஸ்மாஸ்டர் வேலை தேடிக் கொடுத்த' தென்னக்கோனின் பாஷையிலேயே விடையிறுத்தார். எங்களின் அமைச்சர்களுக்குப் பாராளுமன்ற சம்பிரதாயங்கள் எவ்வளவு தெரிந்திருக்கிறது, என்பதை எண்ணி சபை இலிகிதர் உள்ளத்திற்குள் சிரித்திருப்பார்!

### அவர்கள் கொடுக்கும் மதிப்பு:

எங்களுடைய அமைச்சர்கள் பாராளுமன்ற சனநாயக ஆட்சிமுறைக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பது பாராளுமன்றத்தில் சமுகமளிக்கும்படி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கட்கு அனுப்பும் சுற்றறிக்கைகளிலிருந்து தெரிகிறதல்லவா?

### எஸ். ஜே. வி.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் சத்திரசிகிச்சையின் பின் சுகமடைந்து வருவதாக இப்பொழுது கிடைத்துவரும் செய்திகள் கூறுகின்றன. நவம்பர்மாத முற்பகுதியில் அவர் இலங்கைக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பதவி மொழிகள்:

சில பதவி மொழிகள் இவை:-

1. பதவி உயர்வுக்காகச் சொந்த இனத்தையே காட்டிக் கொடு.
2. பல்லைக் காட்டியாவது உதவிமந்திரிப் பதவியைப் பெற்றுக்கொள்.
3. பதவி வந்திட்டால் பழையது மறந்துபோம்.
4. பதவிக்கும் நேர்மைக்கும் நெடுநாளைய விரோத
5. பதவி கிடைத்ததும் எதிர்ப்புத் தோன்றும். [ம்

### எரிகிற வீட்டில்...!

அக்டோபர் மாதச் சம்பளத்திலிருந்து தேசிய அபிவிருத்தி வரி என்று கௌரவமாக அழைக்கப்படும் சம்பளவெட்டு அமுலுக்கு வருகிறதல்லவா? அக்டோபர் மாதச் சம்பளத்தை வாங்கும்போது, புதிய வரவு-செலவுத் திட்டத்தின் பலாபலன்களைப் பொதுமக்கள் நேரடியாக உணரப் போகின்றனர். அப்பொழுதுதான் பொதுமக்கள் அரசாங்கத்திற்கெதிராகக் கூச்சலிட ஆரம்பிப்பார்கள். இச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பாவித்து அரசாங்க எதிர்ப்புப் பிரசார இயக்கத்தைத் தீவிரமாக்க அரசியல் கட்சிகள் சில திட்டமிட்டு வருகின்றனவாம். தொழிற்சங்கங்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள லங்கா சமசமாசக் கட்சி, இச் சூழ்நிலையைப் பாவித்து வேலைநிறுத்தங்கள்மூலம் தனது இழந்த செல்வாக்கை மீண்டும் பெறவேண்டுமென, அக்கட்சியிலுள்ள தீவிரவாதிகள் கருதுகின்றார்களாம்.

### நாற்றப் பேச்சு:

கூட்டுறவு மொத்த விற்பனவு சங்கக் கட்டடத்தில் இருவர் பேசிக்கொண்டது என் காதில் விழுந்தது. அதை அப்படியே ஒப்பிக்கின்றேன் வாசக அன்பர்கட்கு:

முதலாமவர்: கருவாட்டு வர்த்தகமே ஒரே நாற்றமடிக்கிறதே!

இரண்டாமவர்: நாற்றமடிக்கத்தானே ஐயா செய்யும்! இலட்சக்கணக்கா பணம் புரண்ட வர்த்தகம் அல்லவா அது.

### காலம் வரட்டும்:

தொழிற்சங்க வட்டாரங்கள் வேலைநிறுத்தங்கட்கு தயாராகிக்கொண்டு வருவதாக முன்பு பலதடவை எழுதியிருக்கிறேனல்லவா? புதிய வரிகளை எதிர்த்துத் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்ற முடிவைத் தொழிற்சங்கங்கள் மாற்றவேயில்லை. தக்க சூழ்நிலை தோன்றியதும் வேலைநிறுத்தங்களில் ஈடுபட அவைகள் தயாராகிக்கொண்டே வருகின்றனவாம்.

### கேட்டகுரல்கள்:

"எமது காங்கிரசை எவனாலை ஐயா அசைக்கமுடியும்?"

"என்னையா பேசினாய்! தலைவர் பதவி கிடைச்சிட்டாப் போதும் அவுங்களுக்கு!" [11-ம்பக்கம் பார்க்க]



'எல்லாம் உனக்காக' படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன்.

# கலைவாணருக்கு காவடி எடுத்தவர்கள் எங்கே போயினரோ?

## என். எஸ். கே. நினைவு தினத்தில்......

சமீபத்தில் சென்னையில் கலைவாணர் என். எஸ். கே யின் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. அதில் நடிகவேள் எம். ஆர். ராதா உட்பட ஒரு சில நடிகர்களே கலந்துகொண்டார்களாம். கலைவாணர், இன்றுபிரபலமாகியிருக்கும் எத்தனையோ நடிகர்களை முன்னுக்கு கொண்டுவந்தவர்; அவர்கள் கஷ்டப்பட்ட காலத்தில் கைகொடுத்துதவியவர். ஆனால், அவரது நினைவாக நடந்த விழாவில் நடிகவேள், குலதெய்வம் போன்றவர்களைத்தவிர, வேறு யாரும் வரவில்லை. அவர் மறைந்தபோது, பல நடிகர்கள் அவருக்கு சிலை அமைக்கப்போவதாகவும், அது தங்களது கடமையெனவும் இன்னும் என்னென்னெல்லாமோ சொன்னார்கள். இன்று வரை உருப்படியாக எதுவும் செய்யப்பட்டதாகக் காணோம். தென்னிந்திய நடிகர் சங்கமும் 'தீர்மானம்' நிறைவேற்றியதுடன் தன் கடமை முடிந்து விட்டதாக இருந்து விட்டது. என்ன இருந்தாலும். எங்கள தென்னாட்டுத் திரையுலகத்தை பொறுத்த வரை, வாய்ச்சொல்லளவில் சர்க்கரைதான்

## எம் ஆர். ரதாவுக்கு கிராக்கி

எம். ஆர். ராதா இல்லாமல் இனி படமே வராது போல் இருக்கிறது. "படம் ஓடவேண்டுமா? ராதாவைப்போடு!" என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டு விட்டது. இப்போது அவர் அஞ்சலிதேவியின் சொந்தப் படத்திலும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இப்படத்தில் அவருக்கு மூன்று வேடம்; ஜமாய்த்துவிடமாட்டாரா, என்ன?-பஞ்சவர்ணன்

சினிமா உலகில்

# புதுமுகங்கள்

### மாஸ்ரர் கணேசன்.

இப்பொழுது எந்தப்படத்தில் பார்த்தாலும் குட்டி நடிகர்கள் பங்கு கொள்கிறார்கள். பெரிய நடிகர்களைவிட சில சிறிய குட்டி நடிகர்கள் சிறப்பாக நடிக்கிறார்கள். அந்த வரிசையில் மாஸ்டர் கணேசனும் ஒருவர். மாஸ்டர் கணேசனுக்கு நல்ல முகவெட்டு இருக்கிறது. திறம்பட நடிக்கும் திறமையும் இருக்கிறது. மாஸ்டர் கணேசன் பலபடங்களில் நடித்திருக்கிறார். கவேரியின் கணவன், மிஸ்மேரி (இந்தி), ஸ்கூல்மாஸ்டர் (இந்தி), மகாவீர பீமன், பிரசிடென்ட் பஞ்சாட்சரம் முதலிய படங்களில் நடித்திருக்கிறார். பல நாடகங்களிலும் நடித்துள்ளார்.

### கே. பி. சரஸ்வதி.

இவர் இதுவரை 100 நாடகங்களில் நடித்திருக்கிறார். அம்மா வேடந்தாங்கி, சிறப்பாக நடிக்கிறார். நடிப்பில் துடிப்புமிக்க இவர் அன்பு, ஆசை, நல்லவீடு, சுமங்கலி, வாழப்பிறந்தவன், சௌபாக்கியவதி, ... ஷ்மாப்பிளே, ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். வெளிவரவிருக்கும் இளைய கன்னி; மகாவீரவீமன் படங்களில் நடித்துள்ளார்.

### டி. எம். வத்சலா

மற்றவர்களைச் சிரிக்கவைக்க முயல்வது மிகவும் கடினம். சிலர் பேச்சாலும் சிலர் நடிப்பாலும் சிரிக்க வைக்கின்றனர். அத்தகைய நகைச்சுவை பாத்திரத்தை ஏற்று திறம்பட நடிக்கிறார் குமாரி டி. எம். வத்சலா. இவர் இதுவரை 18 நாடகங்களில் நடித்திருக்கிறார். நடிப்பது மட்டுமின்றிபரதநாட்டியமும், ஓரியண்டல் நடனமும் ஆடுகிறார். வகால் காஷ்மீரி, எஸ். எம். குமரேசன் ஆகியோருடன் இவர் நடித்துள்ளார். எதிர்காலத்தில் ஒரு நல்ல நடிகையாக வருவார் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

### சுஜாதா ராணி

கட்டான உடல், வெட்டான பார்வை, இளஞ்சிட்டான் உடல் கொண்டவர்தான் சுஜாதாராணி. இவர் 100 நாடகங்களில் நடித்திருக்கிறார். காகா ராதாகிருஷ்ணன் புளிமூட்டை ராமசாமி, ஈ. ஆர். சகாதேவன், சாயிராம் ஆகியோர் நாடக மன்றங்களில் இவர் நடித்துள்ளார். எந்த வேடத்துக்கும் பொருத்தமாக இருக்கும் இவருக்கு நல்ல எதிர் காலம் இருக்கிறது.

# 'கண்ணின் மணிகள்' சுந்தர் செத்ததாகச் செய்தி வந்தது!

பணத்தைப் பணம் என்று பாராமல், "மகாவீரபீமனை"த் தயாரித்து வருகிறார்கள், ஜெய்குமார் பிக்ஸர்ஸார். படப்பிடிப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படத்தில் "கண்ணின் மணிகள்" சுந்தரும் முக்கிய பாகமொன்றில் நடித்து வருகிறார். அவரது பாகங்களின் பாதிப்படப் பிடிப்பு முடிவடைந்தபின்னர் ஒருநாள், சுந்தரைப்பற்றிய திடுக்கிடும் செய்தியொன்று தயாரிப்பாளர்களுக்குக்கிடைத்தது. "சுந்தர் செத்தார்" என்ற அந்தசெய்தியை டெலிபோன் மூலம் கேட்டறிந்ததும், தயாரிப்பாளரும் மற்றும் பலரும் கதறிக்கொண்டு சுந்தர் வீட்டிற்கு விரைந்தார்கள்.

அங்கு என்ன என்று பார்த்தால், கதவு மூடியிருந்தது. கதவுமேல் "A. F" என்று எழுதியிருந்தது. அப்போதுதான் தெரிந்தது. அன்று 'ஏப்ரல் பூல்' அதாவது ஏப்ரல் முட்டாள் தினம் என்பது! விழுந்தடித்துக்கொண்டோடியவர்களின் முகத்தைப்பார்க்க வேண்டுமே!

### ஒரே பார்வையில்!

● ஸ்ரீதரின், "தேன் நிலவு" இம்மாத இறுதியில் வெளிவருகிறது.

● சிவாஜி, சாவித்திரி பிரதம பாகத்தில் நடிக்கும் "வடிவுக்கு வளைகாப்பு" படத்தின் படப்பிடிப்பு, நீண்ட நாளைய இடைவேளையின் பின், மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது.

### "கிங்கொங் படத்தில்" தாராசிங்!

வடநாட்டுத் தயாரிப்பாளர் பாபுபாய் மீஸ்திரி, ஆங்கிலத்தில் வெளிவந்த 'டஹர்கியூலிஸ்" என்ற படத்தைப் போன்ற ஒரு படத்தை ஹிந்தியில் தயாரிக்கிறார். படத்துக்கு பெயர்—கிங்கொங்! கதாநாயகன் — மல்யுத்த வீரர் தராசிங்! இவருக்கு ஜோடியாக கும் கும் என்ற நடன நட்சத்திரம் நடிக்கிறார். இப்படத்தில் 'மாமிசமலை' கிங்கொங்கும் நடிக்கிறார்; மல்யுத்தமும் இருக்கும் என்பதை சொல்லவா வேண்டும்?

## பார்த்தால் பசி தீருமா?

ஆம்! என்கிறார்கள் "சகோதரி"யைத் தயாரித்தவர்கள். சிவாஜி, ஜெமினி, தங்கவேலு, சாவித்திரி, சரோஜாதேவி, எம். சரோஜா, பாலையா ஆகிய நட்சத்திரக்குவியலைப் போட்டு இப்பொழுது தயாரித்து வரும் தங்களது படத்துக்கு "பார்த்தால் பசி தீரும்" என்று பெயரிட்டிருக்கிறார்கள் இதன் டைரக்டர் யார் தெரியுமா? ஏ. பீம்சிங் 'அதுதான் "பா" வில் ஆரம்பிக்கும் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதென்று' நீங்கள் கூறினால் நான் என்ன மறுக்கப்போகிறேன்!


சேலம்

S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்

**வீரிய விர்த்தி மாத்திரை**

மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும் அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00

**லேபனம் மெழுகு**

குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகிய வைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00

தேவைக்கு எழுதவும்:

கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்

Prop: S. M. R. M. S

ராகலை பஜார், ஆள்க்கருனை.

(சிலோன்) (P. O.)

பல்சுவைப் புதினம்

'ரமணன்' தொகுத்தது

# உப்பின் நிறத்தை மாற்ற மருந்து — கிணற்றுத் தவளை — இறந்த நேரம் — ஆபிரிக்காவில் அகஸ்டா கரடி

அழகாக இருக்கவிரும்புபவர்க்கெல்லாம் எப்பொழுதும் பெரும் தடையாக இருப்பது அவர்களது மேனியின் நிறம்தான். பலர், குறிப்பாகப் பெண்கள் கறுப்பாக இருக்கவிரும்புவதில்லை! அப்படிப்பட்டவர்கள் யாராவது 'நாம் அழகாக இல்லையே' எனவருத்தப்படுகிறீர்களா? அப்படியானால் உடனடியாக உங்கள் துக்கத்தை விடுங்கள். உங்கள் நிறத்தை வெகு சுலபமாக மாற்றிவிடலாம்.

ஹைட்ரோக்வினேன் மானே பென்ஸைல்ஈதர் (Mono Benzyl Eather of Hydrovinomono) மருந்திருக்கிறது. இம் மருந்தை உடலிலே பூசினால் மிகவிரைவில் அதாவது, இரண்டு மூன்று கிழமைக்குள் உடலின் நிறம் முழுவதும் வெள்ளையாக மாறிவிடும். இம் மருந்து வெள்ளையாக்கி விடுவதால் பார்ப்பதற்கு மிகவும் அசிங்கமாக இருக்கலாம். உடல்வெள்ளையாக இருப்பதிலும் பார்க்க சிவப்பாக இருப்பதைத்தானே எல்லோரும் விரும்புவார்கள்?

ஹைட்ரஜின் பொராக்ஸைட் (Hydrogen Peroxide)என்றழைக்கப்படும் மருந்தொன்றிருக்கிறது. இந்த மருந்து சாதாரணமாக எல்லா மருந்துக் கடைகளிலும்கிடைக்கும். இதை மூன்று சதவிகிதம்தண்ணீரிலே கலந்து காலையிலும் மாலையிலும் உடலில் போடவேண்டும். நிற விருத்தியை நீங்கள் சீக்கிரத்தில் காணுவீர்கள். இவை எல்லாவற்றிலும் பார்க்க சுலபமான வழி இதுதான்.

கிளிசரின் (Glycerine) என்றோர் வஸ்து இருக்கிறதே? இவ்வஸ்துவை படுக்கப்போகும்பொழுது, இரண்டு மூன்று துளிகளாக கையில் எடுத்துக்கொள்ளவும்; (கையிலே எந்த தூசும் இல்லாமலிருப்பது அவசியம்). பின்னர் அதை நன்றாகத் தேய்த்து முகத்திலே பூசுங்கள். முகத்தின் நிறம் விருத்தி அடைவதை விரைவில் காணலாம்.

இதற்கெல்லாம் காரணம் யாதெனில் மேற்கூறிய மூன்று வஸ்துக்களும் தோலின் நிறத்திற்கு பொறுப்பாக இருக்கும் 'மல்பீஜியன் லேயரின்' (Malphigian layer) குணத்தை மாற்றிவிடுகின்றன!

* *

''இவன் கிணற்றுத் தவளையாகச் சீவிக்கின்றான்!'' ''இவனுக்கும் கிணற்றுத் தவளைக்கும் வித்தியாசமேயில்லை!'' என்றெல்லாம் உங்களை யாராவது பேசுகின்றார்களா? உடனே நீங்கள் அவர்களுக்கு நல்ல 'கழட்டல்' கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது!

ஏனெனில் பாலைவனங்களில் வாழும் கிணற்றுத் தவளைகள் ஒரே கிணற்றில் சீவிப்பதேயில்லை! உங்களைப் பேசுபவர்களும், நீங்கள் உலக அறிவில் மிகவும் குறைவாக இருந்தால்தானே 'ஏய் கிணற்றுத் தவளையே!' என்று கூறுவார்கள்! அதாவது நீங்கள் ஒரே இடத்தில் சீவிப்பவர்கள் என்பதே அவர்கள் கருத்தாகும்!

ஆனால்பாலைவனக்கிணறுகளில் வாழும் கிணற்றுத் தவளைகள் என்ன செய்கின்றன தெரியுமா? அவைகள் கிணறு விட்டுக் கிணறு போகின்றன! அதாவது சில அரசியல் வாதிகள் கட்சி விட்டு, கட்சி பாய்வதுபோல், (அரசியல்வாதிகளையும் இனிமேல் கிணற்றுத் தவளைகளென அழைக்கலாமே என்கிறார் ஓர் குறும்புப் பேர்வழி!) நிற்க இதற்குக் காரணமென்ன தெரியுமா? பாலைவனங்களுக்குக்கீழே நீரோட்டங்கள் இருக்கின்றன. இந்த நீரோட்டங்களிலே மீன் கூடப் பிடிக்கலாம்!

* *

ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டுவிட்டானென்றால், உங்களால் அவன் எப்பொழுது கொலை செய்யப்பட்டான் என்பதை அறிய முடியவில்லையா? அப்படியானால் நீங்கள் பின்வரும் முறையைக் கையாண்டு, அவன் கொலைசெய்யப்பட்ட நேரத்தைக் கண்டு பிடிக்கலாம்!

பிணத்தின் உடலில், ஒருவித உஷ்ணமிருக்குமல்லவா? அந்த உஷ்ணத்தை 'பாகைமானி' (Thermometer) கொண்டளக்கவும். பின்னர், மனிதனின் சாதாரண உடல் சூடான 98.6 டிகிரியிலிருந்து, அப்பிணத்தின் சூட்டைக் கழித்துவிட்டு, 1.5 டிகிரியால் பிரித்தீர்களானால், அம்மனிதன் எவ்வளவு நேரத்திற்கு முன்னர் கொலைசெய்யப்பட்டான் எனக்கண்டுபிடிக்கலாம்! அதாவது வரும் மறுமொழிதான் அவன் கொலைசெய்யப்பட்டு சென்றநேரம்!

* *

உலகிலேயே மிகப் பெரிய மிருகம் அகஸ்ட்டா கரடி. இது ஆபிரிக்காக் காடுகளில் வாழ்கின்றது. இதன் உயரம் எட்டரை அடி இருக்கும்! பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கும். இம்மிருகத்தால் நீக்ரோக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்படுகின்றனவாம்.

அதாவது. இம் மிருகம் தான் காட்டிலே நடந்து செல்லும்பொழுது எந்தப் பெரிய மரமாக இருந்தாலும் சரி, அதைப் புரட்டி, தான் செல்வதற்கெனஒரு வழியை உண்டுபண்ணிக் கொண்டுதான் செல்லும். ஆபிரிக்க அரசாங்கம் என்னசெய்கிறதென்றால் காடுகளில் இந்த இடத்தை அப்படியே வீதியாக மாற்றி விடுகிறது! ஆபிரிக்காவில் நீக்ரோக்கள் வாழும் பகுதிமுழுவதற்குமின்னும் வீதிபோடப்படவில்லையே!

நீதிபதிக்கு முன்னால்:

# இரவல் நகைகளா?

வழக்குப் பதிவுப் புத்தகத்தைப் படித்து விட்டு நிமிர்ந்து பார்த்தார் நீதிபதி. சிரிந்தபடியே ''இந்தப் பெண்களுக்குச் சண்டைபோடாமல் இருக்க முடியாதா?'' என்று கேட்டார்.

எதிரியின் வழக்கறிஞர்:- சண்டை போடாவிட்டால் பெண்கள் பெண்களாக இருக்கமாட்டார்கள் ஐயா! அவர்களின் அடிப்படைக் குணங்களில் அது ஒன்று! (சிரிப்பு)

பார்வதியின் வழக்கறிஞர்:- ஆம்ஐயா! அதுவும் எதிரியைப் போன்ற பெண்களுக்குச் சண்டை பிடிக்காவிட்டால் அன்று உணவு உண்ணாததைப் போல் கவலைப்படுவார்கள்! (சிரிப்பு)

எதிரியின் வழக்கறிஞர்:- மனுதார் பார்வதி எவருக்கும் சளைத்தவரல்ல! (பலத்த சிரிப்பு)

நீதிபதி:- அவர்களின் சண்டை நோய் உங்களுக்கும் தொத்தி விட்டது போலிருக்கிறதே! (பலத்தசிரிப்பு). சரி என்ன நடந்ததென்பதைச் சொல்லுங்கள்.

எதிரியின் வழக்கறிஞர்:- எனது கட்சிக்காரரரான லலிதா எவருடனும் சண்டைக்குப் போகவில்லை. மனுதார்தான் வலியச் சண்டைக்கு வந்தார். வலிய வருவதை விடும் வழக்கம் எங்களிடம் இல்லை (சிரிப்பு) அவர் ஏசியதற்குச் சூடாகப் பதில் சொன்னோம். அவ்வளவுதான்! (பலத்தசிரிப்பு)

எதிரிக் கூண்டிற்குள் நின்ற லலிதாவும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டார். கறுப்புத்தான் என்றாலும் வசீகரமான தோற்றம். 'முகத்தில் ஒருவித களை சொட்டிற்று. நல்ல இறுக்கமான மெல்லிய உருவம்.

பார்வதியின் வழக்கறிஞர்:- கடன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல், இன்று நாளையென்று கடத்திக் கொண்டே வந்தார்கள். வீட்டுக்குப்போய்க் கட்டாயமாகப் பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு கேட்டதற்கு ஏசியதுமல்லாமல் அடிக்கவும் வந்தார்கள்.

எதிரியின் வழக்கறிஞர்:- நாங்கள் அவர்களிடம் எந்தப்பணமும் வாங்கவில்லை, அவர்களிலிருந்து நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம் என்பது எங்கள் கட்சிக் காரர் போட்டிருக்கும் தங்க நகைகளைப் பார்த்தாலே தெரிகிறது ஐயா!

பார்வதி:- அம்மட்டும் இரவல் நகைகள் ஐயா! (சிரிப்பு)

நீதிபதி:- நகைகள் இரவலா அல்லவா என்று தீர்ப்புக்கூற நான் இங்கு வரவில்லை! (சிரிப்பு). இரண்டு பகுதியினரும் அயல் வீட்டுக் காரர்கள் என்று எண்ணுகின்றேன். வீட்டுக்குப் போங்கள். இனிமேல் சண்டை போடாதீர்கள். சண்டை போட்டால் இரண்டு பகுதிகளையும் சிறைக்கு அனுப்பி விடுவேன்.

# புதையுண்ட மனிதர்

## மாயமாய் மறைந்த விந்தை!

இத்தாலியைச் சேர்ந்த சல்மோனா என்னுமிடத்தில், தன்னை ஒரு 'யோகி' என்று அழைத்துக் கொண்ட ஒரு மனிதர், தன்னை உயிரோடு ஒரு சவப்பெட்டிக்குள் வைத்துப் பூமிக்கடியில் புதைத்துவிடும்படி பொது மக்களை வேண்டிக்கொண்டார். பொது மக்களும் அவர் வேண்டுகோளை நிறைவேற்றினார்கள்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, அந்த மனிதர் புதைக்கப்பட்டிருந்த இடத்தைத் தோண்டிப் பார்த்த போது, புதைக்கப்பட்ட பெட்டி அப்படியே இருந்தது. ஆனால்,பெட்டிக்குள் வைத்து அடக்கம் செய்யப்பட்ட மனிதரைமட்டும் காணவில்லை!

இதைப்போலவே, சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவைச் சேர்ந்த லாஸ்ஏஞ்சல்ஸ் நகரத்திலும் ஒரு சம்பவம் நடந்ததாம். இந்தியாவிலிருந்து அமெரிக்காவைச் சுற்றிப்பார்க்கச் சென்ற ஒரு பக்கிரி, பூமிக்குள் பத்துமணிநேரம் தன்னைப் புதைத்து வைக்கும்படி பொதுமக்களை வேண்டிக் கொண்டார். அவர்வேண்டுகோளின்படியே அவர்களும் அவரை ஒரு பெட்டிக்குள் படுக்க வைத்துப் புதைத்தார்கள். பத்துமணி நேரத்திற்குப் பின்னர் பெட்டியைத் தோண்டியெடுத்துப் பார்த்தபொழுது, அதிலிருந்த பக்கிரியைக் காணவில்லை. அவர் எங்கு போனார், எப்படிப் போனார், என்னவானார் என்பதை இன்றுவரையில் கண்டுபிடிக்கமுடியவில்லை!

ஒருவனுடைய மூச்சு நின்று விட்டால் அவன் பிரேதமாகி விடுகிறான். அந்தப் பிரேதத்தைக் கொண்டுபோய் எரித்தோ புதைத்தோ விடுவதுதான் இன்றுவரை எல்லா நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. ஆனால் மூச்சு நின்று பிரேத நிலைய கிடந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் பரீட்சார்த்த வேலையில் ரஷ்சிய விஞ்ஞானிகள் ஓரளவுவெற்றி கண்டிருக்கிறார்கள். அ தகைய ஒரு விஞ்ஞான பரிசோதனை நிகழ்ச்சியைச் சுவையாக விளக்குகிறது இக்கட்டுரை இந்தப்பரிசோதனைகள் வெற் யடைந்து நடைமுறைக்கு வந்துவிட்டால்......

# பிரேதத்துக்கு உயிர் ஊட்டிய விந்தை

சிறிது காலத்திற்கு முன் சோவியத் நாட்டின் வடபகுதியில் ஒரு அதிசயமான நிகழ்ச்சி நடைபெற்றது! நவீன வைத்திய விஞ்ஞானத்திலும் நம்பமுடியாத சூழ்நிலையில், ஒரு சின்னஞ்சிறிய கிராம ஆஸ்பத்திரியில் இறந்தவன் என்று கருதப்பட்ட ஒருவனுக்கு மீண்டும் உயிர் அளிக்கப்பட்டது. இவன் மீண்டும் பிழைத்தெழுவான் என்று எவராலும் நம்பமுடியவில்லை. எனினும் அவன் உயிர் பெற்று விட்டான்!

வயல் வேலைக்குச் சென்றவன் பனிப்புயலில் சிக்கிக் கொண்டான். குளிரில் விறைத்துக் கட்டை போல் கிடந்த அவன் உடல் கிராம ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டது. உடல் முழுதும் தூள்ப்பனி மூடியிருந்தது. சிறிய மரச் சுத்தியலால் அவன் உடலை டாக்டர் தட்டிப் பார்த்தார். கட்டையிலிருந்து கிடைக்கும் ஒலிக்கும் அதிலிருந்து கிடைத்த ஒலிக்கும் எத்தகைய வித்தியாசமும் இல்லை. கட்டையைப் போன்று ஜடமாகிக் கிடந்தது உடல். அவனுடைய கண்கள் வெறும் பீங்கான் கண்கள் போலத் தோன்றின. அதன்மீது மெல்லிய பனித்திரை உறைந்திருந்தது. அவனுடைய ஆடையெல்லாம் உறைந்து கடினமாகியிருந்ததால், நாங்கள் கூர்மையான கருவிகளால் அதைவெட்டியெடுத்து அகற்றுவதற்குள் பெரும்பாடாகி விட்டது. இருதயத் துடிப்போ, நாடியோ, மூச்சோ எதுவும் கிடையாது.

உடலை நன்கு ஆராய்ந்தபின், எப்படியும் இந்த மனிதனைக் காப்பாற்ற முயற்சிப்பது என்று தலைமை டாக்டர் 'பேவல் அப்ரமியான்' உறுதி பூண்டார். ஒருவேளை முயற்சியில் வெற்றியீட்டலாமல்லவா? இந்த மனிதன் பனிப்புயலில் சிக்கி உறைந்துபோய் எவ்வளவு நேரமாயிற்று என்பது எவருக்கும் தெரியாது. பார்ப்பதற்கு இளைஞனாக இருந்ததால் நோயினால் இவன் "இறந்திருக்க" மாட்டான்; குளிருக்குத்தான் இரையாகியிருப்பான் என்று டாக்டர் தீர்மானித்தார். இன்னொன்றும் அவருக்குத் தெளிவாகியது. குறிப்பிட்ட சில சிகிச்சைக்காக டாக்டர்கள் நோயாளியின் உடலை கீழான வெப்ப நிலைக்குக் குளிரவைப்பார்கள். இவ்விதம் குளிரவைக்கப்பட்ட நிலையில் இருப்பதைப் போலத் தோற்றமளித்தான், அந்த இளைஞன். சாதாரணமான நிலைமையில் ஒருவன் இறந்து போனால், இறந்த உடலுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்குக் கிடைக்கும் நேரம் மிகவும் சொற்பம்—உடலில் நின்ற ஒரு சில நிமிடங்களுக்குள் மீண்டும் உயிரூட்டியாக வேண்டும். ஆனால் உடலின் வெப்பம் கணிசமான அளவு குறைக்கப் பட்டிருந்தால், மீண்டும் உயிரூட்டுவதற்கு அதிக நேரம் கிடைக்கிறது. அதனால் தான் செயற்கையாக உடலைக் குளிர வைத்தல் என்ற முறை-ஹைபோதெர்மி என்று அழைக்கப்படும் இம்முறை—இருதய ரண சிகிச்சையின்போது எச்சரிக்கை நடவடிக்கையாக இப்போது விரிவாகக் கையாளப் படுகிறது.

அவன் பிழைப்பது துர்லபமாயிருந்த போதிலும் முயற்சி செய்து பார்ப்போம் என்று டாக்டர் தீர்மானித்தார். சாராயமும் இளம் சூடான தண்ணீரும் உடலில் தேய்க்கப் பட்டன. கொஞ்ச நேரம் தேய்த்த பின் கட்டை போல விறைத்திருந்த உடல் சற்று துவளத்தொடங்கியது அப்போது இருதயம் பிடித்து உருவி விடப்பட்டது. செயற்கை மூச்சோட்டம் மேற்கொள்ளப் பட்டது. சுமார் 150 கன சென்டிமீட்டர் ரத்தம் அவனுடைய உடலுக்குள் செலுத்தினார்கள். சிறிது குளுகோஸை சாராயத்தில் கரைத்து சிரையினுள் செலுத்தினார் டாக்டர். நாற்பது நிமிடங்கள் செயற்கை மூச்சோட்டம் மேற்கொண்ட பின்னர். இலேசாக அவன் மூச்சுவிட ஆரம்பித்தான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மிக பலவீனமாகத் துடிக்கத் தொடங்கியது. உடனே வென்னீர்ப் போத்தல்களை அவனைச் சுற்றிலும் வைத்து டாக்டர்கள் தம் முயற்சிகளை இரட்டிப்பு உற்சாகமுடன் செய்யத் தொடங்கினார்கள். சன்னஞ் சன்னமாக மூச்சு உறுதிப்பட ஆரம்பித்தது. ஒரு மணி ஐம்பது நிமிடங்களில் அவன் மீண்டும் உயிர்பெற்று விட்டான். மேலும் பல மணி நேரம் அவன் நினைவின்றிக் கிடந்தான்.

நினைவு பெற்ற பின்னர், மெதுவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறினான். உறை நிலைத்தானத்திற்குக் கீழே கடுங்குளிர்; பனிப்புயலில் அவன் சிக்கிக் கொண்டான். டிராக்டர் பழுதாகிவிட்டது; குளிர் தாங்க முடியாமல் உடல் பலவீனமாகியது; கீழே விழுந்தான்-அவ்வளவுதான் தெரியும்.

கனப்புக்காக ஏராளமான மின்சார பல்புகளுடன் கூடிய சட்டம் செய்து நோயாளியைச் சுற்றி வைத்தார்கள். நெடுநேரம் கடுங் குளிரில் விறைத்துக் கிடக்க நேர்ந்ததால் அவனுடைய உடலில் பல பாகங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. நிமோனியா காய்ச்சல் வேறு வந்தது.

காய்ச்சல் குணமான பின்னர் டாக்டர்கள் ரண சிகிச்சை செய்து வலது கையில் நான்கு விரல்களிலிருந்து இரண்டு எலும்புகளையும், இடது கையிலிருந்து மூன்று விரல்களையும் எடுத்து விட்டார்கள். அவன் பிழைத்துக்கொண்டான். இந்த நிகழ்ச்சி நடைபெற்று ஓராண்டாகிறது. இன்னும் அவன் உடல் நலமுடன் தான் இருக்கிறான்; வேலை செய்யவும் முடிகிறது.

மீண்டும் உயிரூட்டப்படுவதன் அடிப்படையாது? இது விஞ்ஞான பூர்வமானதுதானா? ஆம். நிச்சயமாகவிஞ்ஞானபூர்வமானதுதான். மனித உடலிலுள்ள சில திசுக்களும் உறுப்புகளும் சிறிது நேரம் இயங்காமல் நின்று விட்டு மறுபடியும் இயக்கத் தொடங்கலாம் என்பதை நெடுநாட்களுக்கு முன்பே விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது.

குளிர்காலம் பூராவும்—சுமார் ஆறு மாதங்கள்-ரஷ்யக் கரடிகள் பூமிக்கடியில் படுத்துறங்கும் என்பது அனைவரும் அறிந்ததே. இவ்விதம் ஆழ்ந்து உறங்குகையில் அதனுடைய திசுக்களில் வளர்சிதை மாற்றம் மிக மெதுவாகநடைபெறுகிறது.மூச்சடங்கி இறந்ததுபோலவே கிடக்கிறது. ஆனால் வசந்தம் வந்ததும் கரடி மெதுவாக விழித்தெழுந்து வேட்டைக்குச் செல்கிறது.

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் ரஷ்ய விஞ்ஞானி பக்மெத்தேவ் குளிர் காலத்தில் ஆழ்ந்து உறங்கும் வௌவால்களைக் கொண்டு சில சோதனைகள் நடத்தினர். அவற்றின் வெப்பத்தை உறைநிலைத் தானத்திற்குக் கீழே 4–9 டிகிரி வரை குறையும்படி செய்து மறுபடியும் அவற்றிற்கு வெப்பமூட்டினார். வௌவால்கள் மீண்டும் உயிர் பெற்றன. ஒவ்வொரு உயிர்ப் பிராணியின் குளிர் தாங்கும் அளவும் வெவ்வேறாய் இருப்பதை அவர் கண்டு பிடித்தார். வௌவாலை உறைநிலைத் தானத்திற்குக் கீழே 9 டிகிரி வரையிலும் குளிர்ந்து போகும்படி செய்யலாம். அதற்கும் கீழே குளிரும்படி செய்தால் அது உண்மையிலேயே இறந்து போகும்.

மனிதன் சேர்ந்தாற்போல வாரக்கணக்கில் தூங்கமுடியாது. ஆனால் அவன் இறந்தவுடன், அவனுடைய சிசுக்களில் சற்று நேரம் வரையிலும் வளர் சிதை மாற்றம் மெதுவாக நடைபெறுகிறது. வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட நிலை இது. மூச்சு ஒய்ந்து, இதயத் துடிப்பு நின்று போனாலும் மனிதனுடைய திசுக்கள் இன்னும் இறந்து போகவில்லை.

உடலைக் குளிரச் செய்வதன் மூலம் இந்தநிலையை நீடிக்கலாம் என்பதை பரிசோதனைகள் எடுத்துக் காட்டியுள்ளன. ஆனால் மனித மூளையிலுள்ள செல்களுக்கு ஊறு ஏற்படாமல், குறைந்த பட்சம் எத்தனை டிகிரி வரையினும் மனித உடலைக் குளிரச் செய்யலாம்?

இந்தப் பிரச்சனை ஆராயப்பட்டு வருகிறது. கிளினிக்கல் மரண நிலையில், திசுக்களின் ஜீவசக்தியை அப்படியே பாதுகாக்கும் பொருட்டு செயற்கையாக உடலைக் குளிரச் செய்ய வேண்டும். மிகக் குறைந்த வெப்ப நிலைக்கு உடலைக் குளிர்வித்தால்தான் மீண்டும் அதற்கு உயிரூட்டுவது சாத்தியமாகும். பேராசிரியர் நெகோவ்ஸ்கியு
அவருடைய சக ஊழிய
களும் தற்சமயம் இப்பி
ச்சனையைப் பற்றி ஆர
ய்ந்து வருகின்றனர். நா
களைக் கொண்டு ஏரா
மான சோதனைகள் நட
தியிருக்கிறார்கள். மயக்
மருந்து அளிக்கப்பட்
நாயின் உடல் வெப்பநி
உறைநிலைத் தானத்திற்
மேல் 10-12 டிகிரி வ
யிலும் குளிர்விக்கப்பட்
கிளினிகல் மரண நிலையி
இரண்டுமணி நேரம் வை
க்கப்பட்ட பின், மீண்டு
உயிரூட்டப்பட்டது. உ
கிலேயே முதன் முதலா
இத்தகைய சாதனை சா
க்கப்பட்டது.

இந்த சோதனைகளிலி
ந்து ஒரு விஷயம் தெ
வாயிற்று. உடல் வெப்ப
தை அதிகமாகக் குறை
து குளிர்விப்பதற்கு ஏற்
கிளினிகல் மரண நிலை
ல் அந்த உடலை அதிக
ரம் வைத்திருந்து மீண்
ம் உயிரூட்டலாம். உத
ரணமாக உடலின் வெ
ம் 24 டிகிரியாகக் கு
க்கப்பட்ட நாய், கிளி
ல் மரண நிலையில் அ
மணி முதல் ஒன்ற
மணி வரை இருந்தபி
மீண்டும் உயிர்ப்பிக்கப்
லாம். உடலின் வெப்
நிலை 10—12 டிகிரியாக
குறைக்கப்பட்டால், இ
ண்டுமணி நேரத்திற்கு
பின்னால் உயிர்ப்பிக்கப்
டலாம். இவ்விதம் எ
வளவு அதிகமாகக் குளி
வித்து, எவ்வளவு அதி
நேரம் வரையிலும் வை
திருந்து மீண்டும் உட
க்கு உயிரூட்டலாம் என்
தன் இறுதி எல்லை இன்
ம் கண்டு பிடிபடவில்லை

நம்முடைய சகாப்த
மகத்தானது. சமீப கால
வரையிலும் அந்த கற்
னை என்று கருதப்பட்
பலவும் இன்று மனித
ன் அறிவுத் திறமையா
சாதிக்கப்பட்டிருக்கின்
ன. மனிதன் 'இறந்து'
ரண்டு மூன்று நாட்க
கழிந்தபின்னர்கூட அவ
க்கு மீண்டும் உயிரூட்
முடியக்கூடிய நாள் வெ
தொலைவிலில்லை!

❋ இந்திய யோகிகள் சிலர் தம்மை நிலத்துள் வைத்துப் புதைத்தபின்னர் பலமணிநேரம் கழித்து மீண்டும் புதை குழியிலிருந்து உயிரோடு வெளிவருவது பகிரங்கமாகவே நடைபெற்றிருக்கிறது. இது எப்படி நடக்கிறது?

❋ ரஷ்யத்துருவக் கரடிகள் அங்குள்ள உறைபனிக்காலமான ஆறுமாதகாலமும் பூமிக்கு அடியிலே மூச்சை அடக்கிப் பிரேத நிலையில் கிடக்கின்றன. குளிர் காலம் முடிந்ததும் உயிர்பெற்று எழுந்து நடமாடுகின்றன. இது எப்படி நடக்கிறது

இவற்றிலிருந்து சிந்திக்கும்போது இறந்துபோனதாகக் கருதப்பட்ட ஒரு மனிதனுக்கும் ஏன் உயிர் கொடுக்கமுடியாது என்றகேள்வி பிறக்கிறது.

...பிரேதத்தைக் கொண்டுபோய் எரித்தோ,
...றது. ஆனல் மூச்சு நின்று பிரேத நிலையில்
...ள் ஓரளவுவெற்றி கண்டிருக்கிருர்கள். அத்
...க்கட்டுரை இந்தப்பரிசோதனைகள் வெற்றி

# ...டிய விந்தை!

...பதை அவர் கண்டு பிடித்தார். வெளவாலை உறைநிலைத் தானத்திற்குக் கீழே 9 டிகிரி வரையிலும் குளிர்ந்து போகும்படி செய்யலாம். அதற்கும் கீழே குளிரும்படி செய்தால் அது உண்மையிலேயே இறந்து போகும்.

மனிதன் சேர்ந்தாற்போல வாரக்கணக்கில் தூங்கமுடியாது. ஆனல் அவன் இறந்தவுடன், அவனுடைய சிசுக்களில் சற்று நேரம் வரையிலும் வளர் சிதை மாற்றம் மெதுவாக நடைபெறுகிறது. வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட நிலை இது. மூச்சு ஓய்ந்து, இதயத் துடிப்பு நின்று போனலும் மனிதனுடைய திசுக்கள் இன்னும் இறந்து போகவில்லை.

உடலைக் குளிரச் செய்வதன் மூலம் இந்தநிலையை நீடிக்கலாம் என்பதை பரிசோதனைகள் எடுத்துக் காட்டியுள்ளன. ஆனல் மனித மூளையிலுள்ள செல்களுக்கு ஊறு ஏற்படாமல், குறைந்த பட்சம் எத்தனை டிகிரி வரையினும் மனித உடலைக் குளிரச் செய்யலாம்?

...தம்மை நிலத்துள் வைத்துப்
...நேரம் கழித்து மீண்டும் புதை
...வெளிவருவது பகிரங்கமாகவே
...து எப்படி நடக்கிறது?
... அங்குள்ள உறைபனிக்கால
... பூமிக்கு அடியிலே மூச்சை
...கிடக்கின்றன. குளிர் காலம்
...ழுந்து நடமாடுகின்றன. இது

...போது இறந்துபோனதாகக்
...வன் உயிர் கொடுக்கமுடியாது

இந்தப் பிரச்சனை ஆரா...யப்பட்டு வருகிறது. கிளி...னிக்கல் மரண நிலையில், ...திசுக்களின் ஜீவசக்தியை ...அப்படியே பாதுகாக்கும் ...பொருட்டு செயற்கையா...க உடலைக் குளிரச் செய்ய ...வேண்டும். மிகக் குறைந்த ...வெப்ப நிலைக்கு உடலைக் ...குளிர்வித்தால்தான் மீண்...டும் அதற்கு உயிரூட்டுவ...து சாத்தியமாகும். பேராசிரியர் நெகோவ்ஸ்கியும் அவருடைய சக ஊழியர்களும் தற்சமயம் இப்பிரச்சனையைப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். நாய்களைக் கொண்டு ஏராளமான சோதனைகள் நடத்தியிருக்கிருர்கள். மயக்க மருந்து அளிக்கப்பட்ட நாயின் உடல் வெப்பநிலை உறைநிலைத் தானத்திற்கு மேல் 10-12 டிகிரி வரையிலும் குளிர்விக்கப்பட்டு, கிளினிகல் மரண நிலையில் இரண்டுமணி நேரம் வைக்கப்பட்ட பின், மீண்டும் உயிரூட்டப்பட்டது. உலகிலேயே முதன் முதலாக இத்தகைய சாதனை சாதிக்கப்பட்டது.

இந்த சோதனைகளிலிருந்து ஒரு விஷயம் தெளிவாயிற்று. உடல் வெப்பத்தை அதிகமாகக் குறைத்து குளிர்விப்பதற்கு ஏற்ப, கிளினிகல் மரண நிலையில் அந்த உடலை அதிக நேரம் வைத்திருந்து மீண்டும் உயிரூட்டலாம். உதாரணமாக உடலின் வெப்பம் 24 டிகிரியாகக் குறைக்கப்பட்ட நாய், கிளிகல் மரண நிலையில் அரைமணி முதல் ஒன்றரை மணி வரை இருந்தபின் மீண்டும் உயிர்ப்பிக்கப்பலாம். உடலின் வெப்பநிலை 10—12 டிகிரியாகக் குறைக்கப்பட்டால், இரண்டுமணி நேரத்திற்குப் பின்னல் உயிர்ப்பிக்கப்படலாம். இவ்விதம் எவ்வளவு அதிகமாகக் குளிர்வித்து, எவ்வளவு அதிக நேரம் வரையிலும் வைத்திருந்து மீண்டும் உடலுக்கு உயிரூட்டலாம் என்பதன் இறுதி எல்லை இன்னும் கண்டு பிடிபடவில்லை.

நம்முடைய சகாப்தம் மகத்தானது. சமீப காலம் வரையிலும் அந்த கற்பனை என்று கருதப்பட்ட பலவும் இன்று மனிதனின் அறிவுத் திறமையால் சாதிக்கப்பட்டிருக்கின்றன. மனிதன் 'இறந்து' இரண்டு மூன்று நாட்கள் கழிந்தபின்னர்கூட அவனுக்கு மீண்டும் உயிரூட்ட முடியக்கூடிய நாள் வெகு தொலைவிலில்லை!

# கந்த புராணத்திலும் காணலாம், கம்பரசத்தை!

## கவி கச்சியப்பரின் அழகிய வர்ணனைகள்.

சுப்பிரமணியப் பெருமானுடைய திருமணத்தைக் காணச் சென்ற அரிவையர்கள் மதுவெறியினல் மயங்கிக்கிடந்த காட்சியினை அழகாக வருணித்துள்ளார் ஆசிரியர் கச்சியப்பர். இருபத்தைந்து பாடல்களால் இக்காட்சிதனை எம் மனத்திரைமுன் வரைந்துள்ளார். அழகுறப் பாடப்பட்ட இக்கவிதைகளில் பல வண்ணக் காட்சிகள் மிளிர்கின்றன. பொங்கிவரும் பெருவெள்ளம் போல் நிகழ்ச்சிச் சித்திரங்கள் சென்றுகொண்டு போவதை ஆசிரியர் கவினுற எடுத்துக் கூறுகின்றனர். கற்பனைச் செறிவும், உயர்வு நவிற்சியும் தற்குறிப்பேற்ற அணியும் இக்காட்சிகளை வருணிக்குமிடத்தில் காணக்கிடக்கின்றன. மதுவெறிக்காட்சியினை புலவர் எங்ஙனம் வருணிக்கின்ருர் என்பதனை இனிப்பார்ப்போம்.

### இளநீர் பருகும் உவமை.

அந்திமாலைப் பொழுதில் சூரியன் மறைந்ததும் விண்மீன் கூட்டங்கள் நீல வானகத்தே தோன்றி மினுமினுத்தன. பால் நிலவு எங்கும் பொங்கி வந்து ஒளியினைப் பொழிந்துகொண்டிருந்தது. அந்நேரத்திலே தையலார் நெஞ்சிலே ஒரு கிளுகிளுப்பு உண்டாகியது. காமநோயினல் அவர்கள் வாடினுற்போலத் தோன்றிற்று. அழகிய கிண்ணங்களில் மதுவினை நிரப்பிக்கொண்டு அவர்கள் தத்தம் இடங்களுக்குச் சென்றனர். ஆடவர் சிலரும் அம்மாதர்களைத் தொடர்ந்து சென்றனர். குளிர்ச்சி பொருந்திய அக்கள்ளினை தம் அரிவையருக்குத் தாமாகவே ஊட்டி, அவர்களுடைய அதரத்தினின்றும் ஊறும் அமிர்தத்தை தாம் பருக ஆடவர்கள் விழைந்தனர்! இந்நிலையினைக் கச்சியப்பர், தெங்கு மரத்திற்கு நீரூற்றலுக்கும், பின்பு இளநீரைப் பருக ஆவலாய் இருப்பதற்கும் ஒப்பிடுகிருர்.

### 'மதி'க்கு மது கொடுக்கும் மங்கை.

வான மண்டலத்தில் முழுமதி மின்மினிகளுடன் தோன்றும் காட்சியினைப் புலவர் பூவுலகிலுள்ள தேன்மொழி நங்கையர்களின் வதனங்களுக்கும், அவர்களின் கைகளில் மின்னும் வெள்ளிக் கிண்ணங்களுக்கும் ஒப்பிடுகின்ருர். வண்டுகளுக்கு உணவாகிய மதுவினை ஒரு மாது சிறிது கூடுதலாக அருந்தியிருந்ததனல் மயக்கமுற்றுக் கதிகலங்கியிருந்தாள். மதியின் தண்ணொளி மேனியில் பட்டதும் அவள் வெறி அதிகமாயிற்று. மதியிலும் மறுவுண்டு. அம்மறுவினையகற்ற மதுத்துளிகளைப் பருகும்படி முழுநிலவுக்கு அந்நங்கை பணித்தாள். அங்ஙனம் பூரணச் சந்திரன் செய்யாவிடில் சந்திரனின் மறு அகலாது என்றும், அப்படிச்செய்தால் முழுமதியின் நிலவும் முழுவதுமே தெரியுமென்றும் அவள் கூறினுள்.

இன்னுமொரு நங்கை அறிவு மயங்கி இருக்கும் வேளையில் சந்திரனைப் பார்த்து தான் அருந்தும் மதுவினில் அரைவாசியைத் தான் தருவதாகவும், சந்திரன் வெட்கத்தினல் தன்னிடம் மது தரும்படி கேட்கவில்லையென்றும் கூறினுள். தான் சந்திரனுக்காக மதுவைப் பங்கிட்டுக்கொடுக்க முன்வருவதாயும், சந்திரன் மதுவினை உண்டால் சூரியனிலும் விருப் படைவான்என்றுங் கூறினுள். இவள் அதிகம் மதுவருந்தினதினுல் அறிவு கலங்கியிருப்பதுடன், தான் அருந்தும் மதுவினைச் சந்திரனுக்குப் பங்கிட்டுக்கொடுக்கவும் முன்வந்துள்ளாள்.

இன்னெருத்தி கள்வெறியினுல் அசைந்து அசைந்து நடக்கலுற்ருள். சந்திரனின் ஒளி அவள்மேல் பட்டதும் அவள் நிழலுருவம்நிலத்திற்படிந்தது. தன் நிழலுருவத்தைக் கண்டு அவள் மோகித்துப் பிதற்றலுற்ருள்.

### களவாகப் புணர்ந்தானே கணவன்?

வேருெருத்திக்கு கள்ளுண்ட மயக்கத்தில் தன்னிலேயே சந்தேகம் வந்து விட்டது. வெள்ளிக்கிண்ணத்தில் இருந்த மதுவினில் பாதி குடித்திருந்தாள். மிகுதியினைக் குடிக்கும் பொழுது தன் பார்வை அக்கிண்ணத்தில் இருந்த மதுவில் பிரதிபலிப்பதைக் கண்டாள். தன்னுடைய கயல் போன்ற விழிகள் செக்கச் செவேலெனச் சிவத்திருப்பதையும், அதரங்கள் வெளுத்துக் காண்பதையுங் கண்டு, தன் கணவர் தன்னையறியாமலேயே தன்னைப் புணர்ந்துள்ளார் என்றெண்ணி மதுவெறிகொண்டு தன் கணவனைத் தேடியோடினுள். மது நுகர்ந்தார்க்கும், கணவரோடு சேர்ந்தார்க்கும் விழி சிவத்தலும் அதரம் வெளுத்தலும் இயல்பென்றும், அந்த மங்கை, தான் மதுவுண்டதை வெறியிலுணராது, மயக்கத்தாற் கணவர் புணர்ந்தமையாலுண்டானதென எண்ணினுள் என்றும் உரை ஆசிரியர் ஆறுமுகநாவலரவர்கள் கூறுகிருர்கள்.

### "இதுகாறும் எங்கே சென்றீர்?"

சிலமாதர்கள் அழகினையுடைய ஆபரணங்களைப் பூண்டிருந்தனர். நல்ல தெளிவான மதுவும் உண்டிருந்தனர். ஆனல் காமநோய் அவர்களை வாட்டிற்று. அம்புலியின் தண்ணொளிஅவர்களுக்குக் குளிர்ச்சியைத்தருவதையிட்டு தணலினைத் தருவது போற்றேன்றிற்று. அதனுல் உணவையும் மறந்து புணர்ச்சியை வேண்டி நின்றனர். தம் கணவரைப் புணர்கின்ற ஆவல் கொண்டிருந்தனர். மதுவெறி காமத்தினை இங்கு விளைத்ததைப் புலவர் மறைமுகமாய்க் கூறுகின்ருர். காமநோயினுல் கணவரைப் புணர விரும்பும் அம்மாதர்களுள் சிலர், தம்கணவர் அருகிலில்லாததையிட்டுவாடினர். சில கணவர் சிறிது நேரங்கடந்து வந்ததும், "இதுகாறும் எங்கு சென்றிருந்தீர்?" என்று பிணங்கினர் சில மாதர்.

மதுவெறிகொண்ட பெண்கள் தம்நிலை மறந்து நாணமற்று ஆடை அரையினின்றும் அவிழ்ந்து வீழவும், பிதற்றிக் கொண்டும், தம்முணர்வில்லாது தடுமாறித் திரிந்தும் வாடினர். எண்ணத்தை அழிப்பதற்குக் கள்ளினைப்போல் வேருென்றுமில்லை என்பதற்கு மேற்கண்ட காட்சி சாட்சியாகும்.

மேற்கூறப்பட்ட காட்சிகளைத் தனது வருணனைகளில் நேர்த்தியாய் கச்சியப்பர் வருணித்துள்ளார் என்றே சொல்லவேண்டும். ஆபாசமான நிகழ்ச்சிகள் பாடல்களின் பொருள்களாக அமைந்திருந்தாலும், அவற்றைச் செவ்வனே விளக்கிப் புலவர் கூறுவதிற்கு ஓர் காரணமுண்டு. தீதானதொன்றை மக்கள் மனததில் தீதென்று எடுத்துக்காட்டுவதற்கு திமையானவற்றை நன்கு விளக்கிச் சொன்னுலேயே அவர்கள் அதனை நன்கு பதிய வைத்து அவற்றின் இழிமையை யுணர்ந்து நன்மையைப்பேணுவார்கள். இதற்காகவே புலவர் கள்ளுண்ணல் என்ற தீதான பழக்கத்தால் விளையும் சம்பவங்களை பெண்களின் காமக்கிளர்ச்சியின் மூலம் காட்டுகின்ருர் என்று கூறலாம். திருமணக் காலங்களில் களியாட்டம் போன்றவற்றில் மக்கள் பெரு விருப்புடையவர்களாதலால், கச்சியப்பர் சுப்பிரமணியப் பெருமானின் திருமணத்தைக் காணச் செல்லும் அரிவையர்கள் கள்ளுண்டு மயங்கிச் செய்த ஆர்ப்பாட்டங்களைச் சுவை படக் கூறி அவற்றின் இனிமையையும் கூருமற்கூறியுள்ளதால் புலவரின் திறன் பாராட்டத்தக்கதேயாகும்.

—ரேவதி—

## ரப்பர் விமானத்தை மடித்துப் பெட்டியில் வைத்துக் கொண்டு போகலாம். தேவைப் படும்போது,

# காற்றடித்துப் பறக்கலாம்!

குடீயர் டயர் அன்ட் ரப்பர்க் கம்பெனியைச் சேர்ந்த குடீயர் விமானக் கம்பெனி, ஒரு ரப்பர் விமானம் செய்யமுற்பட்டுள்ளது. அதை ஒரு காரிலுள்ள பெட்டியில் வைத்துக்கொண்டு போகலாம்; அதிலிருந்து எடுக்கலாம்; காற்றடிக்கலாம்; பறக்கவிடலாம்!

ஒரு காரிலுள்ள டயர்களுக்கு வேண்டிய காற்றைவிடக் குறைந்த காற்று அமுக்கம் அதற்குப் போதும் என்று குடீயர் கம்பெனியார் சொல்லுகின்றனர். சிறகும் வாலும் விமானஓட்டி இருக்கும் இடமும் 'எயர்மேட்' என்னும் ரப்பர்ப்பொருளால் செய்யப்பட்டவை. நாற்பது குதிரைத் திறனுள்ள எஞ்சினுல் அது இயக்கப்படுகிறது. சில உலோக ஆதாரங்களே அதற்கு வேண்டும். பெருந்தொகையாக அந்த விமானத்தை உற்பத்தி செய்யக் கருதவில்லையென்றும், "ஏயார்மேட்'டின் உபயோகத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கே அதை உற்பத்தி செய்திருப்பதாகவும் கம்பெனி அதிகாரிகள் கூறினுர்கள்.



## களனிநதி தீரத்திலே...... (7)

# மோகவலை

'ஈழத்துச் சோமு'

கூரிய விழிகள் மலர, குமிண் சிரிப்பு கன்னத்தில் தவழ, மார்பளவு எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படத்தைக் கண்டதும், ரூேசியே நேரில் வந்து உட்கார்ந்திருப்பதுபோல முதலில் எனக்குப் பட்டது!—அறையிலிருந்த மேசைமீது ஒரு புகைப்பட ஸ்ராண்ட்—அதில் கம்பீரமாக ரூேசியின் படம்—அதைக் கையிலெடுத்து முகத்தோடு அணைக்க ஆசைப்பட்டபொழுது அதில் முத்து முத்தாக தடித்த எழுத்துக்களில் ''என்றும் உங்களின் ரூேசலின்'' என்ற சொற்கள் எழுதப்பட்டிருந்தன!

புகைப்படத்தை மேசையில் வைத்தேன். மேசையில் கலந்துகிடந்த தாள்களில், ரூேசி ரூேசி எனக் கிறுக்கப்பட்டிருந்தது—அந்தக் கிறுக்கல்கள் நடராசனின் எழுத்துக்கள்!

நான் இல்லாதவேளையில் ரூேசியின் படம் இங்கு ஏன் வந்தது? எப்படி வந்தது?

தலைக்குள் ஏதோ அரிப்பதுபோல இருந்தது. கோபமும் எரிச்சலும் கொழுந்துவிட்டன. எரித்துவிடுபவன் போல நடாவைத்திரும்பிப் பார்த்தேன்—

அவன் இன்னும் உறக்கத்திலிருந்து எழும்பவில்லை. நிம்மதியாகப் போர்த்துக்கொண்டு படுத்துக்கிடந்தான்.

உடுப்புக்களைக் களைந்து வைத்துவிட்டு நான் குளிப்பதற்காககுளியல் அறைக்குள் போய்விட்டேன். மனம் சந்தேகத்தாலும், ஆசையாலும், ஏமாற்றத்தாலும் நடாவின்மீதும் ரூேசியின்மீதும் மாறிமாறிமாறிக் குமுறிக்கொண்டிருந்தது. ரூேசி ஒரு ஏமாற்றுக்காரி! ஆசையைத் தூண்டிவிட்டு அரும்பிலேயே கசக்கிவிட்டவள். தன் சிரிப்பு மூலம் மாறி மாறி மயக்குவதுதான் அவள் குணமோ? பருவக்கவர்ச்சி என்ற இழையைக்கொண்டு மோகவலையைப் பின்னி வஞ்சனையை மறைத்து வைத்து வருபவர்களை விழுத்திச் சுவைக்கும் சிலந்திக் கூட்டம்தான் அவள்.—

அவன் மட்டும் என்ன? சொந்த நண்பன் என்றும் சிந்திக்காமல் சுகவீனமாக நான் போய்விட்ட வேளையில் அவளுடன் சல்லாபம் புரியத் துவங்கி விட்டானே! துரோகி!—

உள்ளம் வெறிகொண்டு சீறியது—உடல் ஏமாற்றத்தாலும் பதறியது.

குழாயைத் திருகிவிட்டுத் தலையைக் கொடுத்தேன். குளிர்ந்த சலம் ஜில்லென உடலை நனைத்தது.

*

நான் தலையைத் துவட்டிக்கொண்டு அறையுள் வரும்பொழுது நடா எழுந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். என்னைக் கண்டுவிட்டு, முகம் மலர நலமும் ஊர்ப்புதினங்களும் விசாரித்தான். நான் வெறுப்புடன் இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்லிவிட்டு சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே தேநீர் குடிக்கப்போக ஆயத்தமாகிவிட்டேன்.

''அண்ணை; இங்கு நிறையப் புதினங்கள். உங்களுடன் கனக்க கதைக்கவேண்டும்..." நடா பீடிகை போட்டான் நான் ஆவலுடன் கேட்பேன் என எதிர்பார்த்து. ''எல்லாப் புதினங்களும் உன்னுடன் இருக்கட்டும்...... எல்லாம் ஆறுதலாகப் பேசுவோம்'' - நான் அசுவாரஸ்யமாக வெட்டிப் பதில்கூறிவிட்டு 'விர்'ரென வெளியே சென்றுவிட்டேன்.

கந்தோரில் வேலைகள் குவிந்துகிடக்கும், ஒரு மணி நேரம் முன்னதாகப் போயிருந்தும், அன்று எந்த வேலையிலும் மனம் பதியவில்லை; உள்ளம் எரிந்து புகைந்தபடி கிடந்தது. வெறிச்சென உட்கார்ந்தேன்.

பத்து மணிபோல திடீரென ஒரு ரெலிபோன் அழைப்பு: எடுத்துக் குரல் கொடுத்தேன். ஒரு பெண்ணின் குரல் ஒலித்தது—அவள் ரூேசிதான்! எனது உடல்நிலை, மற்றும் புதினங்கள் விசாரித்தாள். நடராசன்மூலம் நான் ஊரிலிருந்து திரும்பிவிட்டதை அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

"உங்களைப் பார்க்கவேண்டும்.

''உங்களைப் பார்க்கவேண்டும் என ஒரே ஆசையாக இருக்கிறது. பின்னேரம் சந்திப்போமே?'' அவள் குரல் குழைந்தது.

''மன்னிக்கவும் ரூேசி; சந்திக்க இயலாது" தடிப்பாக நான் சொன்னேன்.

''என்ன!......ஏன்?"

''அப்படித்தான்''

''வேலையதிகமோ?''

''ஊம்...ம்...''

''அப்போ நாளையாவது சந்திப்போமே'' அவள் குரல்.

றிசீவரை டக்கென்று வைத்துப் பேச்சைத் துண்டித்தேன். எனக்கு அத்தனை கோபம்!

அன்று மாலை நடாவையோ ரூேசியையோ சந்திக்காமல் நான் தனியாகவே கந்தோரிலிருந்து திரும்பிவிட்டேன். அறையில் நான் காலையில் கண்ட புகைப்படம் மேசையில் இல்லை. அறையில் எங்குமே காணவில்லை.

நடா எங்கோ கால் பந்தாட்டம் பார்க்கச் சென்றிருந்ததாகச் சொல்லிக்கொண்டு இரவுதான் அறைக்குத் திரும்பினான்.

நான் எதுவுமே பேசவில்லை. உறங்கிவிட்டேன்.

மறுநாட்காலையிலும் நான் வெள்ளெனக் கந்தோருக்குப் போய்விட்டேன் நடாவை எதிர் பார்க்காமல். அன்றும் ரூேசி ரெலிபோன் செய்தாள்.

''இன்று சந்திக்கிறீர்களா?'' அவள்தான்.

'ஏன்'? எதிர்க் கேள்வி போட்டேன்.

''பார்க்கவேண்டும் போலிருக்கிறது. காய்ச்சலாக இருந்தனீர்கள். மெலிந்திருப்பீர்களோ......பாவம்''

"ஓகோ பெரிய அக்கறைதான் போ'' நையாண்டியாகச் சொன்னேன்:

''என்ன புதிய தொனியில் பேச்சு இருக்கு?".

"ஏமாற்றுக்காரிகளுடன் அப்படித்தான் பேசுவது" குத்தலாக சூடாகக் கூறினேன்.

ரெலிபோனிலிருந்துகுரல்வரவில்லை. மீண்டும் நான் பேசினேன். ஆத்திரம் அத்தனையையும் கொட்டிவிடவேண்டும் என்ற துடிப்பு!

''என்னைக் காலைவாரி விட்டுவிட்டாய்......என்னைத்தான் உனக்குப் பிடிக்கிறது என்று சொன்னதெல்லாம் இப்போதும் உண்மையா?" நான்கேட்டேன்.

''நான் அன்று சொன்னதை நீங்கள் தப்பர்த்தம் செய்துகொண்டு......" அவள் குரலில் பதற்றம் தெரிந்தது. தப்பர்த்தமும் கத்தரிக்காயும்! உன் நடிப்பைக் கொண்டு போய் நடாவுக்குக் காட்டு. நான் உன்னைச் சந்திக்க விரும்பவில்லை; ரூேசி'' அடித்துச் சொல்லிவிட்டு ரெலிபோனைக் கீழே வைத்துவிட்டேன்.

அன்றிரவு படுக்கைக்குப் போகும்பொழுது நயமாகப் பேசிக்கொண்டு நடராசன் கேட்டான்.

இப்போதெல்லாம் ஒரு மாதிரி இருக்கிறியள் அண்ணை. என்ன கவலை. ஊரில் ஏதும் கஷ்டமோ?''

கஷ்டமும் கவலையும் என்னுடன் இருக்கட்டும் நடா. உன் வேலையை நீயே பார்த்துக்கொள். அதுதான் அழகு'' எனது உறைப்பான பதிலைக்கேட்டு நடா திரும்பிப் படுத்துவிட்டான்.

நானும் நடராசனும் அந்தக் கிழமை பூராவும் மனம் விட்டுக் கதைக்கவில்லை. தேவையானவற்றுக்குமட்டும் இரண்டொரு வார்த்தைகளுடன் நிறுத்திக்கொண்டோம். கந்தோருக்கு நான் தனியாகப் போய் தனியாகவரத்தொடங்கினேன்.

நீறு பூத்த நெருப்பாக எரிச்சலும் அசூசையும் அமுங்கிக் கிடந்தன.

சனிக்கிழமையன்று ஒரு கோழித்தூக்கம் போட்டுவிட்டு நாலுமணிபோல எழுந்திருந்தேன். நடாவும் எழுந்து முகம் கழுவிவிட்டு அவசரம் அவசரமாக உடுப்பணிந்து கொண்டிருந்தான்.

''அண்ணை! கோல்பேஸ் போகப்போகிறேன். வருகிறீர்களா?'' அவன் இதமாகக் கேட்டான்.

''ஏன்? அங்கு ரூேசியும் வருகிறேன் என்றாளா?'' பொரிந்து கொட்டினேன்.

''ஓமண்ணை; உங்களைக் காணவேண்டுமென்று அவளும்ஆசைப்படுகிறாள். உங்களுக்கு ரெலிபோன் பண்ணினதுக்கு நீங்கள் எரிஞ்சு விழுந்தீங்களாம்......வாறியளா?''

''நான் அந்த நடிப்புக்காரியிடம் வரவில்லை நீபோ?"

''அண்ணை! அவளைப்பற்றி உப்பிடிச் சொல்ல

[11-ம் பக்கம் பார்க்க]



மூன்றும் கட்சி.

## இலக்கிய விமரிசனம்.

நம்மில் பலருக்கு இலக்கிய விமரிசனம் பற்றித் தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வது மிகையாகாது. 'இலக்கிய விமரிசனம் என்ற தேவையற்ற வேலை எதற்காக?' என்று கேட்பவர்களும் நம்மிடையே இருக்கின்றார்கள். என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏதோ ஒரு நூலின் குற்றங்குறை காண்பதோ, குணம் நிறைவு காண்பதோதான் இலக்கிய விமரிசனம் என்று நம்மில் பலர் எண்ணியிருக்கிறோம்.

இலக்கிய விமரிசன விவகாரம் தமிழிற்குப் புதிதாக இருப்பதனுல்தான் இத்தகைய நினைவுகள் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியாது. மற்றைய மொழியினரிடத்திலும், பெரும்பாலோரிடம் இலக்கிய விமரிசனம் பற்றி இம்மாதிரியான ஒரு அபிப்பிராயம் தான் இருந்து வருகிறது.

தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் கடந்த காலத்தில இலக்கிய விமரிசனம் இல்லாது இருந்த காரணத்தால், இலக்கிய விமரிசனத்தின் வேலையையும் இலக்கணமே செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இலக்கணம் கற்ற பண்டிதர்கள்தான் உரையாசிரியர்களாகவும் விளங்கினுர்கள். சொல், வசனம், அமைப்பு என்பனவற்றுக்கு இலக்கணம் சொல்வதோடு நின்றுவிடாமல் இவர்கள் பொருளுக்கும் இலக்கணம் சொன்னுர்கள். இந்தப்பொருளுக்கு இலக்கணம் சொல்லுகின்ற வேலையை இலக்கிய விமரிசனத்தின் ஒரு அம்சம் என்றே சொல்லவேண்டும்.

இலக்கியவிமரிசனம்செய்பவன் இன்னதுதான் செய்யவேண்டும் என்று கட்டுப்பாடு எதுவும் கிடையாது. தமிழில் உள்ள ஒரு கவிதை நூலைப்பற்றி விமரிசனம் செய்ய ஆரம்பிக்கின்றஒருவன், தமிழ்க் கவிதை முழுவதையுமே அலசி ஆராய்கின்முன். தமிழ்க் கவிதை முழுவதையும் அலசி ஆராய்கின்ற காரணத்தால் தமிழ் வரலாற்றையும், பண்பாட்டையும் ஆராயவேண்டிய நிர்ப்பந்தமும் அவனுக்கு ஏற்படுகின்றது. இவைபற்றியெல்லாம் சொல்ல நேருகின்றபோது அவன் இவைபற்றிய தனது சொந்த அபிப்பிராயத்தையே வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

[11-ம்பக்கம் பார்க்க]

# 'கற்பு' என்ற பெயரால் இயங்கும் கொடுமைகள் மாய வேண்டும்!

## ஈ. வே. ரா. வின் பகுத்தறிவு வாதம்!

கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப் பட்டதல்ல என்பதுவும், அதுவும் ஆணுே பெண்ணுே ஒருதடவை கலந்த பிறகு எவ்வளவு சுத்தமாயிருந்தாலும் கற்பு போய்விடுகிறது என்ற கருத்துக் கொள்ளக்கூடிதாயுமிருக்கின்றது.

உண்மையாக பெண்கள் விடுதலை வேண்டுமானுல் ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்ப்பந்தக் கற்புமுறை ஒழிந்து, இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சைக் கற்புமுறை ஏற்படவேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுதுகொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும்.

கற்புக்காகப் புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாயவேண்டும்.

கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக் கொண்டு காதலும் அன்பும் இல்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் ஒழியவேண்டும்.

கற்பு என்கின்ற வார்த்தையைப் பகுபதமாக்கிப் பார்ப்போமானுல் கல் என்பதிலிருந்து வந்ததாகவும், அதாவது படி—படிப்பு என்பதுபோல், கல்—கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப் பட்டுவருகிறது. அன்றியும் 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்கின்ற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல்தவருமை. அதாவது நாணயம் சத்தியம் ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடத்தல் என்கின்றதான கருத்துக்கள் கொண்டதாக இருக்கின்றது. பி. வி. கி.

# வானெலிப் பெட்டியாகமாறிய விசித்திர மூளை!

அமெரிக்காவிலுள்ள ஒஹியோ ஆஸ்பத்திரிக்கு வந்த ஒரு நோயாளி, டாக்டரிடம் ஒரு விசித்திரமான வியாதியைப் பற்றிக் குறிப்பிட்டார். அதாவது அவரது செவிகளில் எப்பொழுதும் வானெலிப் பாடல்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றனவாம்!

ஆஸ்பத்திரியிலுள்ள மூளைப் பரிசோதனை நிபுணர்கள் அந்த விசித்திர நோயாளியின் மூளையைப் பரிசோதித்துப் பார்த்தபொழுது, அவர் சொல்வது உண்மைதான் என்பதை உணர்ந்தனர். அந்த நோயாளியின் மூளை ஒரு வானெலிப் பெட்டியாக மாறியிருந்ததைக்கண்ட டாக்டர்கள் அதிசயப்பட்டனர்.

ஒலி பரப்பு நுண் அலைத்தாக்குதலிலிருந்து அவருக்குவிடுதலையளிக்க, ஒரு உலோக வளையத்தை டாக்டர்கள் தயாரித்துக் கொடுத்தனர். நோயாளி அதை அணிந்துகொண்டிருக்கும் பொழுது, வானெலிப்பாடல்கள் அவர் செவிகளில் கேட்பதில்லை. அந்த வளையத்தை அவர் அணிந்துகொள்ளா விட்டால், மீண்டும் அவர் மூளை வானெலிப் பெட்டியாக இயங்க ஆரம்பித்துவிடுமாம்!

# கண்களிருந்தும் குருடாகமாறிய அமெரிக்க நீதிபதி!

தலையங்கத்தைப் படித்தவுடன் அந்த நீதிபதி கண்கள் இரண்டும் அற்றவர் என்று எண்ணி விடாதீர்கள். அவருக்குக் கண்கள் உண்டு; ஆனுல் நீதி மன்றத்தில் இருக்கும்போது காலை முதல் மாலை வரை தன் கண்களை ஒரு வெள்ளைத் துணியால் மறைத்துக் 'குருடாக்கிக் கொள்வார் இந்த நீதிபதி!

வாதியையோ, பிரதிவாதியையோ, அல்லது அவர்கள் இருவருக்குமாக வாதாடும் வழக்கறிஞர்களையோ கண்ணல் பார்க்காமல், வழக்கின் விபரத்தைத் தன் காதால் மட்டும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்து தீர்ப்பு வழங்குவார்.

இந்த அதிசய நீதிபதி யார் தெரியுமா? அமெரிக்காவில் உள்ள ஸெயின்ட் லூயியைச் சேர்ந்த, மிஸௌரி மாவட்ட நீதிபதியாக 1822 ம் ஆண்டிலிருந்து, 14 ஆண்டுகள் பணியாற்றிய ஜேம்ஸ் ஹார்க்கின்ஸ்பெக் என்பவர்தான் அந்த அதிசய நீதிபதி!

இவர், தான் நீதிபதியாக இருந்த 14 ஆண்டுகளிலும் இப்படிக் கண்களிரண்டையும் கட்டிக்கொண்டுதான் வேலை செய்து வந்தாராம்!

# ஆண்டு தோறும் முப்பது 'இடிகள்' விழும் எம்பயர் கட்டிடம்!

'பளிச்' சென்று, கண்ணை வெட்டும் ஒரு வெளிச்சம். அதைத்தொடர்ந்து, காதுகள் செவிடாகும்படி—உலகமே 'கிடு கிடு' என்று ஆடும்படி—ஒரு ஓசை. அதுதான் இடி!

இந்த இடியைப் பற்றி மக்களிடையே பலவகையான கருத்துக்கள் இருந்து வருகின்றன. அவற்றுள்ஒன்று 'இடிஒரே இடத்தில் ஒரு தடவைக்குமேல் விழுவதில்லை' என்பது.

இது தவறு. நியூயார்க்கிலுள்ள அரசாங்க கட்டிடமான 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' என்ற பிரமாண்டமான கட்டிடத்தின் மீது ஒரு வருடத்திலேயே இருபது முப்பது தடவைக்கு மேல் இடி விழுகிறது ஆனுல், அந்தக் கட்டிடம் யாதொரு சேதமுமில்லாமல் கம்பீரமாக நிமிர்ந்து நின்றுகொண்டுதான் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? அக்கட்டிடத்தில் அமைந்துள்ள 'மின்வாங்கி' களின் சக்திதான்!

வரதர் வெளியீடு.

## சைவப் பாடப் பயிற்சி

4, 5, 6, 7, 8-ம் வகுப்புகளுக்குரிய
தனித்தனியான
பயிற்சிப் புத்தகங்கள்
வெளிவந்துவிட்டன!

கொழும்பு விவேகானந்த சபையினரின்
சைவசமயப் பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களுக்கு
மிகவும் வாய்ப்பான நூல்.

எழுதியவர்:
சைவப்புலவர் இ. செல்லத்துரை.

விற்பனையாளர்:
ஆனந்தா அச்சகம் — புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# ஒரு சிறு கவிதைக்குப் பரிசு ரூபா 810,0000!

## கண்ணதாசனும் பாரதிதாசனும் இதைக் கனவிலும் காணமுடியாதே!

தமிழ் இலக்கியத் துறையில் இப்போது அடிக்கடி போட்டிகள் வைத்து அவற்றில் எழுத்தாளர்கள் தம் திறமையைக் காட்டி பரிசுப்பணத்தை தட்டிக் கொண்டுவருகிறார்கள். அண்மையில் பிரபல பத்திரிகை 'ஆனந்த விகடன்' நாவல் துறையில்போட்டி நடத்திரூபா 25000- பரிசு வழங்கியதும், இலங்கை சாகித்தியமண்டலம்நாலு தமிழ் நூல்களுக்கு தலைக்கு ரூபா 1000- பரிசளித்ததும் நேயர்கள் அறிந்ததே!

மேலை நாடுகளில் ஆங்கில இலக்கியத் துறையில் கவிஞர் மில்டனுக்கு அவரது 'இழந்த சுவர்க்கத்துக்காக 5 பவுண்களும், வேட்ஸ்வேத் என்ற கவிஞர் தமது 40 வருட இலக்கிய சேவைக்கு 1000 பவுண்களுக்கு குறைவாகவும் தான் பணமீட்டியிருக்கிறார்கள்;

ஆனால் சில கவிஞர்கள் தமது கவிதைக்கு வாங்கும் தொகை பிரமிப்புத் தருகிறது,

றோபேட் புறெஸ்ட் என்ற அமெரிக்கர் ஒருவர் எழுதுவதற்கு 1000 டாலர்கள் (சுமார் 5000- ரூபா) வசூலிப்பதாகவும், நாலு வரியுள்ள பாடல் எழுத 4 ஆயிரம் டாலர்களும் 14 வரிப் பாடலுக்கு 12 ஆயிரம் டாலர்களும் பெற்றுக்கொள்ளுகிறாராம்!

உலகப்பிரசித்தி பெற்றதும், பதிப்பிக்கப்பட்ட பதினைந்து நாட்களில் 50 ஆயிரம் பிரதிகள் விற்பனையானதுமான 'ஐடில்ஸ் ஒவ் த கிங்' என்ற நூலின் ஆசிரியர் டெனிசன், கிறிஸ்துமஸ் கார்ட்டில் அச்சடிப்பதற்கான ஒரு சிறு கவிதையை 1000 பவுண் கொடுத்தபோதும் எழுத மறுத்து விட்டாராம்!

பிராண்சில் மூன்றாவது ஹென்றி அரசனின் அரசவைப்புலவராயிருந்த பிலிப் டெஸ்போட் என்ற கவிஞர், நாலுவரியில் ஒரு கவிதை எழுதி அரசருக்கு கொடுத்தார்—அந்த அரசரின் பல்வேறு காமக்கிழத்திகளுக்கு அனுப்புவதற்காக!

அந்தக் கவிதையைப் பார்த்த அரசன் ஆனந்தப்பட்டு 600000 பவுண்களை புலவருக்கு அள்ளிக் கொடுத்தானாம்!

பெர்சியன் இலக்கியத்தில் "ஷா நஹூமன்" என்ற காவியம் மிகப்பெரியது; 60,000 வரிகள் கொண்டது. அதை இயற்றுவதற்கு பெர்டுசன் என்ற கவிஞருக்கு 30 வருடம் எடுத்ததாம்.

அதைப் படித்து மகிழ்ந்த சக்கரவர்த்தி முகம்மது, ஒவ்வொரு அடிக்கும் ஒரு பொற்காசாக 60 ஆயிரம் பொற்காசுகளை ஒரு ஒட்டகத்தின் மீது ஏற்றி கவிஞரது இல்லத்துக்கு அனுப்பி வைத்தாராம். ஆனால், அந்தப் பரிசுப்பணம் வந்து சேர்ந்த பொழுது கவிஞர் இறந்து விட்டார்! —பிறகு அந்தப் பணத்தைக் கொண்டு அவரது ஞாபகமாக ஒரு பாலத்தைக் கட்டுவித்தாளாம் கவிஞனின் மனைவி.

இன்று கவிதைகளுக்கு அதிக பணம் பெறுவதாக கூறப்படும் தமிழ்க் கவிஞர்கள் கண்ணதாசனுக்கும் பாரதி தாசனுக்கும் இப்படி பெரும் பரிசுகள் கிடைக்க இன்னும் பல நூற்றாண்டுகள் போக வேண்டுமாக்கும்? ●

பாதிரிமாரின் வேண்டுகோள்:

# "அழகிய இளம் பெண்களை லண்டனுக்கு அனுப்பாதீர்!

## அங்கு அவர்கள் கெடுக்கப்படுகிறார்கள்"

அடிமை வியாபாரம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அழிந்துவிட்டதாக நினைக்காதீர்கள் — இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் அது சுறுசுறுப்பாக-வெவ்வேறு முறைகளில் நடைபெறுகிறது. நாகரிகம் அடைந்து-உலகத்தின் தலைப்பட்டினமாக கால் நூற்றாண்டுக்கு முன்பு வரை கருதப்பட்ட லண்டன் மாநகரத்திலே கூட இன்னமும் பெண் அடிமை வியாபாரம் ஏமாற்று வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம்! வெளிநாட்டிலிருந்து இளம்பெண்களை இறக்குமதி செய்து கொடுக்கப் பலப்பல ஏஜன்சி ஸ்தாபனங்களும் பணியாற்றி வருகின்றன!

"கௌரவமான பிரித்தானியக் குடும்பமொன்றுக்கு தமது குடும்பத்தில் ஒருவராக அழகான மாடி வீட்டில் வைத்திருந்து ஆங்கிலம் போதிப்பதற்கு ஒரு ஜெர்மன் இளம் பெண் தேவை."—ஐரோப்பாவிலுள்ள ஆங்கிலப் பத்திரிகைகளில் தேவைப் பகுதிகளின் கீழே மேற்கண்ட மாதிரி விளம்பரங்கள் அடிக்கடி வெளியாகும்.

ஆஸ்திரியா, இத்தாலி, ஜெர்மனி முதலிய நாடுகளிலுள்ள கிராமப் பெண்கள் படித்துவிட்டு தொழிலுக்காகக் காத்திருக்கும் ஏழைப் பெண்கள் — லண்டன் மாநகரில் இலவச வாழ்க்கை நடத்தி — ஆங்கிலமும் படித்துக்கொண்டு ஊர் திரும்பலாம் என்ற ஆசையில் வருடந்தோறும் இப்படிப் போலிவிளம்பரங்களைக்கண்டு 50 000 பேர்வரை லண்டனுக்கு வருகிறார்களாம்!

லண்டனுக்கு வந்து சில நாட்களிலேயேவாழ்க்கை கசந்துவிடும். காரணம்; குடும்பத்தில் ஒருவராக வைத்து வளர்க்க என்ற விளம்பரத்தின் கருத்து-வீட்டு வேலைக்காரியாக இருக்கவேண்டும் என முடிந்துவிடுவதுதான்!

"உங்கள் இளம் பெண்களை பிரிட்டனுக்கு அனுப்பாதீர்!—அங்கு அவர்கள் கெடுக்கப்படுகிறார்கள்!"—இப்படி ஆஸ்திரியா இத்தாலி நாடுகளிலுள்ள குருமார்கள் தமது மக்களுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள்.

லண்டனிலுள்ள பணக்கார லோபிகளின் கஞ்சத்தனத்தாலும், போலி ஏஜண்டுகளின் பம்மாத்துச் செயல்களாலும் பிரிட்டனின் முகத்தில் கரி பூசப்பட்டுள்ளது.

பெண்கள் தேசிய சபை என்ற ஸ்தாபனம் பிரிட்டனின் பெயரைக் காப்பாற்றும்படி விண்ணப்பித்துள்ளது!

வீட்டில் உடுப்புத்துவைப்பது, குழந்தைகள் பராமரிப்பது, சமைப்பது போன்ற வேலைகள் யாவும் இளம் பெண்களின் தலையில் சுமத்தப்படுகின்றதாம்!

வேறு துறைகளிலும்—ஹோட்டல்களில் பரிமாற மற்றும் கள்ள வியாபாரங்கள் ஆகியவற்றிலும் இந்தப் பெண்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்— மிகப்பயங்கரமானதும் பரிதாபமானதும் இந்த அழகிய இளம் பெண்களை விபசாரத்தில் திருப்பி விடுவதாகும். வெளி நாடுகளிலிருந்து வந்தவர்கள், அதனால் இவர்களைப்பற்றி கேட்பதற்கு யாருமில்லை என்ற நினைப்பில் இவர்களது பாஸ் போட்டுகளையும் வாங்கி கிழித்து எறிந்து விட்டு, வேலைவாங்குகிறார்களாம்.

லண்டனிலுள்ள கொழுத்த பணக்காரக் குடும்பங்களின் ஏமாற்று விளம்பரங்களை நம்பி வந்த இந்த வெளிநாட்டு இளம் பெண்களுக்கு சமையற்காரியின் உடுப்பும், மிக ஏழ்மையான உணவும் தான் கொடுக்கப்படுமாம். தினமும் இவர்கள் 15 முதல் 18 மணி நேரம் வரை ஓய்வின்றி உழைக்க வேண்டும்!

பிரித்தானியப் பணமூடைகளின் பித்தலாட்டச் சூழ்ச்சியில் சிக்கிச் சீரழிந்து கண்ணீரும் கம்பலையுமாக தமது நாடுகளுக்குத் திரும்பியுள்ள இந்த இளம் பெண்களிற் பலர் இப்போது தமக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை சொல்லி வருகிறார்கள். அதனால், பிரான்ஸ், இந்தாலி, ஜெர்மனி முதலிய நாட்டுப் பாராளுமன்றங்களில் பிரிட்டன் கண்டனத்துக்குள்ளாகின்றது. மனித உரிமைகளை மதித்துப் பாதுகாக்கும் நாடாக மதித்தோமே — பிரிட்டனில் இப்படி நடக்கலாமா என பிரெஞ்சுப் பத்திரிகையொன்று சுடச்சுடக் கேட்டுள்ளது. ●

# புனித நகரங்களில் பெண்களின் அனுச்சாரம்.

ஜோர்தானிலுள்ள பிரயாணச் சேவை ஸ்தாபனம் அண்மையில் பெண் பிரயாணிகளுக்கு ஒருகண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜெருசலேம், பெத்தலஹேம் முதலான புனிதநகரங்களிலுள்ள பரிசுத்தமான இடங்களைத் தரிசிக்கவரும் பெண்பிரயாணிகள், மரியாதையான உடைகளை அணிந்து வரவேண்டுமென்பதுதான் அந்தக் கண்டிப்பான உத்தரவு.

பரிசுத்த நகரங்களைத் தரிசிக்கவரும் பெண்பிரயாணிகளில் பலர், உடல் தெரிய உடையணிந்து. அனுச்சாரமான முறையால் வருவதே இந்த உத்தரவுக்குக் காரணமாம்!

## இத்தனை நட்சத்திரங்களா!

"வானவெளியில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன?" என்று கேட்டால், "கணக்கிலடங்காமல் இருக்கின்றன!" என்று தான் நாம் பதில் சொல்வோம். அண்மையில் ஜெர்மன் விஞ்ஞானியான டாக்டர் ஒட்டோஸ்ட்ரூவ் என்பவர், "உலகம் முழுவதிலுமுள்ள கடற்கரையோரங்களில் எத்தனை மணல் இருக்கின்றவோ, அதைவிடக் கூடுதலான நட்சத்திரங்கள் வானத்தில் இருக்கின்றன" என்று கூறியிருக்கிறார்!

## கண்டதும் கேட்டதும்

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

சம்பாதிச்சு ஒரு நல்ல சீலையைத் துணியை வாங்கித் தரவோ நகையை நட்டைச் செய்து போடவோ துப்பில்லை. மீன் குழம்புக்கு பழப்புளி வேணுமாம், பழப்புளி!''—கணவன் விட்டதைப்பார்த்து பரிதாபமாகச் சிரித்தான்.

### பண்டாரநாயக்கா தினம்

இலங்கையின் நான்காவது பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இறந்து இரண்டாண்டுகள் பூர்த்தியாகி விட்டன. கடந்த செப்டம்பர் மாதம் 26 ம் திகதியன்று அவருடைய இரண்டாவது சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது,

இத்தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கவேண்டும். ஆனல் அரசாங்கம் அத்தினத்தைப் பொது விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்து விடுவதால் பெரும்பாலானேர் அத்தினத்தை குஷியாக கொண்டாடுகிருர்களேயன்றி இழவு நாளாகமதித்து துக்கம் கொண்டாடுவதில்லை.

எது எப்படியிருந்தாலும் அன்று ஸ்கூல் இல்லாததில் அடுத்த வீட்டு அம்பிக்கு ஒரே சந்தோஷம். இலங்கையின் முதலாவது பிரதமரும் தேசபிதாவுமான திரு. எஸ். டி. சேனநாயகாவின் சிரார்த்த தினத்தையும் ''பப்ளிக் ஹொலிடே'' யாக்கினல் இன்னெரு நாள் ஸ்கூல் இல்லாமலிருக்குமே என்று அவன் கவலைப்படுகிருன்.

### கலாசாரப் பல் கலைக் கழகம்

திரு பண்டாரநாயகாவின் சிரார்த்த தினத்தையொட்டி திரு. நடேசபிள்ளை ரேடியோவில் அருமையான ஒரு சொற்பொழிவாற்றினர். பௌத்தமதத்துக்கும் இலங்கை பௌத்தர்களின் மொழியான சிங்களத்துக்கும் புத்துயிரளிப்பதற்காக இரண்டு பிரிவேனக்களை சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்திய திரு. பண்டாரநாயகா தமிழ்க் கலாச்சாரத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்காக சேர். பொன். இராமநாதனின் கல்விக் கூடங்களையும் கலாசார சர்வகலாசாலைகளாக்கக். கருதியிருந்தாரென்று கல்லுங் கரையும் வண்ணம் வானெலியில் பேசினர் திரு. சு. நடேசபிள்ளை. திரு. நடேசபிள்ளை யூ. என். பி. மந்திரிசபையில் தபால் வானெலி அமைச்சராயிருந்தவர். அவர், பண்டாரநாயகாவைப் பாராட்டிப் பேச அழைக்கப்பட்டாரென்றுல் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. தமிழ்க் கலாசாரப் பல்கலைக்கழகம் பேச்சளவில் நின்றுவிடாது செயல்படவும் கூடும்.

இந்திய சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்றோர் நூற்றுக்கணக்கில் வேலைதேடி வேட்டையாடுகின்றனர். அந்தக்காலத்தில் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றோர் உத்தியோகமின்றித் திண்டாடவில்லை. இப்போ நிலைமை மாறிவிட்டது. கலாசாரா சர்வகலாசாலையால் நமது கலாசாரம் வளரலாம். ஆனல் வயிற்றை வளர்க்க முடியுமென்பது சந்தேகம்தான். இன்று நமக்கு வேண்டியது வயிற்றை வளர்க்கக்கூடிய கலையேயன்றி மொழியையும் மதத்தையும் கலாசாரத்தையும், பண்பாட்டையும், பிறவற்றையும் வளர்க்கும் கலையல்ல.

— மாயாவி

## இலக்கிய விமர்சனம்

9-ம் பக்கத்தொடர்ச்சி

சொந்த அபிப்பிராயத்தைச் சிறந்த முறையில் வெளியிட நேரும்பொழுதுதான் சிறந்த இலக்கியம் பிறக்கின்ற தென்பது உண்மை. அந்த வகையில் இலக்கியவிமரிசனமும்ஒரு வகை இலக்கியமாகிறது.

நாவல், சிறுகதை, கவிதை என்பனவை எப்படி இலக்கியத் துறைகளோ அதுபோலவே இலக்கிய விமரிசனமும் ஒரு வகை இலக்கியத்துறைதான்.

இலக்கணத்தை வெறுக்கின்ற இலக்கிய ஆசிரியர்களும்கூட இலக்கணத்தை ஒரளவுக்குச் சார்ந்து நிற்கும் இலக்கிய விமரிசனத்தை விரும்புவதற்குக் காரணம் இதுதான்.

—மூன்ரும் பேர்வழி,

## களனிநதி தீரத்திலே

8-ம் பக்கத்தொடர்ச்சி

வேண்டாம்.'' அவன் குரல் தடிப்பாக மாறியது.

''ஓ! பெரிசாக அந்தக் கன்னிகையை நீ காதலிக்கிருயாக்கும்!''

''அண்ணே! அவன் உரத்துக் கத்தினன். ''அவள் என் காதலிமட்டுமல்ல—அவளைக் கலியாணமும் முடிக்கப்போகிறேன்!''

பளீர்!......பளீர்!

நடராசன் வாயை மூடு முன்பு, என் முழுப் பலத்தையும் சேர்த்து அவன் கன்னத்தில் அறைந்துவிட்டேன்.

திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள்போல அவன் கண்கள் மாறிவிட்டன. முன்னேக்கி வந்து ஒரு கணம் என்னைப்பார்த்தான். திடீரென நின்று ஒருகையால் அந்தக் கன்னத்தைப் பொத்திப் பிடித்துக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்துவிட்டான்.

நானும் கலங்கிப்போய் படுக்கையில் படுத்துவிட்டேன்.

சிறிது நேரத்தில் நடராசனது பொருட்களை சூட்கேசுக்குள் போட்டு எடுத்துக்கொண்டு ''அண்ணே; நான் வேறிடம் பார்த்துக் கொள்கிறேன் எனப் புறப்பட்டுவிட்டான்!

(வளரும்)

நாடக விமர்சனம்

## 'எழுத்தாளன் காதலி'

யாழ்ப்பாணம் திருக்குநள் நாடக மன்றத்தினரால் 23-9-61 மனேகரா. தியேட்டரில் ஷி நாடகம் மேடையிடப் பட்டது.

இந்நாடகத்தில் திறம்பட நடித்தவர்கள் வசந்தா, தங்கம் என்ற பாத்திரங்களைத் தாங்கிய பெண்மணிகளே. அதிலும் வசந்தாவாக நடித்தவர் நடிப்பு மிகப் பிரமாதம்.

அடுத்ததாக, பஞ்சாட்சரமாக நடித்த ஏ. ரி. நாயகம், மூர்த்தியாக நடித்த கணேசன் என்போரின் நடிப்பைக் கூறலாம். நாடக பாணியில் நடிக்கும் தன்மை எ. ரி. நாயகத்தின் நடிப்பில் மிளிர்ந்தது. கணேசனின் நடிப்பு முற்பகுதியில் எடுபடவில்லையாயினும், குமாரின் சொல்லை நம்பி தங்கத்தை விரட்டும் கட்டத்தில் கனகச்சிதமாக இருந்தது. நாடகமே களைகட்டிய இடம் அதுவே.

காட்சி அமைப்புக்கள்—முக்கியமாக காளிகோவில், வீடு, மறியல்சாலை என்பன திறம்பட அமைக்கப்பட்டன. இசை அமைப்பு மின்சார அமைப்பு என்பன பிரமாதம். ஆனல் மொத்தமாகப் பார்த்தால் நாடகத்தில் ஏதோ ஒன்று இல்லாதது போல தென்படுகிறது. பல காட்சிகள் மிகச் சுருங்கியதாகவும், ஒரு காட்சி முடிந்து மற்றக் காட்சி தொடங்க சலிப்பு ஏற்படுமளவுக்கு நேரம் எடுக்கப்பட்டமையும், மேடைநிர்வாகம் பூரணத்துவமடையாமையும் இக்குறைக்குக் காரணமாகலாம். எனினும் இந்நாடக மன்றத்தின் வருங்காலம் பொற்காலமாகலாம்.

— பொன்முடி

## இப்படிச் சொன்னர்கள்

### அனுபவமில்லாதவரின் அரசாங்கம்!

''மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ள சுதந்திரக்கட்சியின் வரவுசெலவுத் திட்டத்தை யூ. என். பி. பயன்படுத்தி அனுகூலமடைய முயல்கிறது. சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் அனுபவமும், அரசியல் பரிணமமும் இல்லாததன் விளைவாக அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் சிக்கலாக்கியுள்ளனர்.

— டாக்டர் என். எம்.

(பொரலஸ்கமுவைப் பொதுக்கூட்டத்தில்)

### 'எங்கள் தயாள குணம்'

புதினப் பத்திரிகைகள் முழுக்க அரசியல் பேச்சுக்களைக் கொண்டதாக—குறிப்பாக யூ. என். பி. தலைவர்களின் பேச்சுக்களைக் கொண்டதாக இருக்கின்றன. இவற்றுட்சில அரசாங்கத்துக்கு எதிராகப் புரட்சி செய்யும்படி மக்களைத் தூண்டுவனவாக இருக்கின்றன. என்றாலும் இவற்றைப் பிரசுரிக்க நாங்கள் அனுமதித்துள்ளோம் பத்திரிகைத் தணிக்கையை உண்டாக்கவில்லை. மொழிப்பிரச்சினை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பிரசுரிப்பதற்குத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது''

— பிரதமர் ஸ்ரீமாவோ

(செனட்சபையில்)

### பச்சைப் பொய்!

''தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் மீண்டும் ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சிக்கிருர்களென்பதும், யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க அதிகாரிகள் இது விஷயத்தில் பொது மக்களைத் தூண்டிவிடுகிருர்கள் என்பதும் பச்சைப்பொய்''

— செனட்டர் நல்லையா

(செனட்சபையில்)

### முஸ்லீம்கள் பாதிக்கப்படுவர்.

''இதுவரை, வியாபாரத்தை நம்பி வாழ்ந்த முஸ்லீம்கள் இனிமேல் வேறு துறைகளில் கண்ணோட்டத்தைச் செலுத்துவது நல்லது. வியாபாரம் படிப்படியாகக்கூட்டுறவுமூலமும்,தேசிய மயமூலமும் வர்த்தகர்களின் கையிலிருந்து பறிக்கப்படும்போது முஸ்லீம்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்''

—ஜனப். எஸ். எம். கமால்தீன்

(அக்குரணைப் பொதுக்கூட்டத்தில்)

### கணவன் அனுமதியுடன் விபசாரம்.

'(நஞ்சுக் கிழங்கைத் தின்று)' காலஞ் சென்றவர் எனது சகோதரி. அவள் அடுத்த வீட்டுக் காரரான ஜெயவர்த்தனவுடன் சிநேகம் வைத்திருந்தாள். ஜெயவர்த்தன எனது சகோதரியிடம் வந்துபோவதை அவள் கணவர் எதிர்க்கவில்லை. அவரின் சம்மதத்துடனேயே ஜெயவர்த்தன வந்து போனர். ஜெயவர்த்தன மூலம் அவள் இரு பிள்ளைகளைப் பெற்ருள். பின்பு அவள் கணவர் ஜெயவர்த்தன வந்து போவதை ஆட்சேபித்தார். இதையிட்டு எனது சகோதரி கவலையடைந்திருந்தாள்.

— பி. பி. பாபாஹாமி

(தற்கொலை விசாரணையில்)

### வழக்கு என்னவாயிற்று?

''சில மாதங்களுக்கு முன்னல் அவசரகால சட்டத்தை மீறினேனென்று என்மீதுவழக்குத் தொடரப்பட்டது. கோட்டில் அந்த வழக்குத் தள்ளப்பட்டதும், அரசாங்கம் அப்பீல் எடுக்கப் போவதாகக் கூறிற்று. ஆனல் அதைப்பற்றி இதுவரை எவ்வித பிரஸ்தாபத்தையும் காணவில்லை.

—டட்லி

(பதுளை பொதுக்கூட்டத்தில்)

### கிழ மடையர்!

''நான் அரசியலிலிருந்து விலகிவிட்டேன். எனது பங்கை நிறைவேற்றி விட்டேன். இனி இளைஞர்கள் தங்கள் பங்கைச் செய்யவேண்டும். யுத்தமும் அரசியலும் கிழவர்களுக்கு ஏற்றதல்ல. 'கிழ மடையர்கள் விடப் பெரிய மடையர்கள் இவ்வுலகில் இல்லை' என்ற பழமொழியை நான் நம்புகிறேன்''

— யோண். கொத்தலாவல

(பத்திரிகை நிருபர் பேட்டியில்)

### திரை மறைவில்

3-ம் பக்கத்தொடர்ச்சி

''பார்த்துப்பேசுமையா! எங்கள் தலைவரைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?''

''அது செய்யப்போரும் இது செய்யப்போரும் என்று ஏதோ மிரட்டினுங்களே அதெல்லாம் என்ன ஆச்சு!''

''தொழிலாளி தலைவரென்றுசொல்லுறுங்க; ஏழைமக்களை ஏமாத்திப் புளைக்கிருங்க''

''இழவு! ரேடியோவை இப்பிடி அலற வைக்கிறதா?''

'காவ் டீ! காவ் டீ!''

''பொம்புளைதானே ஜமாய்ச்சிடலாமென்று போனுங்க! இப்ப பெட்டிப்பாம்பாட்டம் அடங்கிட்டாங்க!''

''டின்பால் டீ ஒண்ணு''

(பதுளையிலுள்ள தேனீர்கடை ஒன்றில் கேட்ட குரல்கள்)

Reeistered as a newpaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

"இத்தால் சகலரும் அறிவது..."

## புதினத்தில் புதிய பகுதி!

அடுத்தகிழமை இதழிலிருந்து "இத்தாற் சகலரும் அறிவது......" என்ற பகுதியைப் புதினத்தில் ஆரம்பிக்கிருேம்.

○ இந்தப் பகுதியில் வாசகர்கள் எழுதும் கடிதங்கள் வெளியிடப்படும்.

○ உங்கள் சொந்த வீட்டு விஷயம் முதல் ஐக்கிய நாடுகள் பற்றிய விஷயம்வரை நீங்கள் இந்தப் பகுதிக்கு எழுதலாம். நீங்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு நீங்களே பொறுப்பு.

○ உங்கள் கருத்துக்களை மூன்று வரியிலும் எழுதலாம். முந்நூறு வரியிலும் எழுதலாம். ஆனல் மிகவும் முக்கியமென்று கருதப்பட்டாலன்றி மற்றையவைகள் யாவும் ஆசிரியரின் கத்தரிக்கோலுக்குள் அகப்பட்டு விடுமென்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

○ எழுதுபவர் புனைபெயர் வைத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. ஆனல் சொந்தப் பெயரையும், முகவரியையும் கையொப்பத்தையும் எமக்கு அனுப்பத் தவறக் கூடாது.

இனியும் தாமதிக்க என்ன இருக்கிறது? உங்கள் மனத்திலே துருதுருத்துக்கொண்டிருக்கும் பிரச்சினையை உடனே எழுதி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி: "இத்தாற் சகலரும் அறிவது," புதினம், 226, கர்ங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

வேலையற்ற தமிழாசிரியர்

# மட்டக்களப்பில் 300 பேர்!

## வட பகுதியில் 200 பேர்!

இலங்கையில் இன்று விஸ்வரூபமெடுத்துள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை அரசாங்கத்துக்குப் பெரும்பீதியையூட்டியுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் மக்களைப்பொறுத்வரையில் பல ஆயிரக் கணக்கான படித்த வாலிபர்கள் தொழில் கிடைக்காமல் ஏங்கிக்கொண்டிருக்கிருர்கள். இவர்களில் பலநூற்றுக்கணக்கானேர் பட்டதாரிகளும்,ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களுமாகும். தமிழாசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறியவர்களில் மட்டக்களப்பில் 300 பேருக்கதிகமானேரும், வடபகுதியில் 200 பேருக்கதிகமானேரும் உத்தியோகம் கிடைக்காமல் இருக்கிருர்கள். ஆனல், ஆங்கில, சிங்கள மொழிமூலம் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களுக்கு உடனடியாக நியமனம் கிடைத்து விடுகிறது!

அரசாங்க தமிழ்ப் பாடசாலைகள் குறைவாக இருப்பதும், அங்கு காலி இடங்கள் ஏற்படாததும் இந்த இடநெருக்கடிக்குக் காரணமாகக் கருதப்படுகிறது. அண்மையில் திரு. பீட்டர் கெனமன் தலைமையில் கல்வி மந்திரியைப பேட்டி கண்ட ஆசிரியர் குழு ஒன்றுக்கு அவர் ஆறுதல் கூறியுள்ளார், 55 வயதை எட்டியவர்கள் விலகியவுடன் அந்த வெற்றிடங்களுக்கு நியமனம் செய்து தருவதாக மந்திரி ஜனுப். பதியுதீன் முகம்மது கூறியுள்ளாராம்! பயிற்சி பெற்ற தமிழாசிரியர்களுக்கு நியமனம் கொடுக்கும்வரை எஸ். எஸ். ஸி. தராதரமுள்ளவர்களுக்கு இனி நியமனம் கிடையாதெனவும் தெரிகிறது.

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் தகுதிகாண் தரத்தை எட்டுபவர்களை பாடசாலைகளில் நியமித்து விட்டு, பிறகு பயிற்சிக்காக அவர்களை அனுப்பப்படுமென்றும் கல்வி இலாகா ஒரு அறிக்கை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

◎ பஞறிஸ், பங்களூர் பட்டுச் சேலைகள்!

◎ சுத்தமான பட்டு வேட்டி சால்வைகள்!

மற்றும் எல்லா வகையான துணிமணிகளும் நம்பிக்கையாகவும் மலிவாகவும் பெறுவதற்கு

**S. T. நாகரத்தினம்**

புடைவை வியாபாரம்

கந்தரோடை ரோட் : : சுன்னுகம்.

எங்களிடம் ஆயுள்வேத வைத்தியத்திற்குரிய சகல மருந்துச் சரக்குகளும் நரை மயிர்க றுக்கச் செய்யும், பிரம்மி, கேசரஞ்சன தைலமும் (கெயர் ஓயில் வகைகளும்,) குருமருந்துகள் கருணனந்தர் மருந்துகள், தண்டபாணி வைத்தியசாலை மருந்துகள், வாசனைக்குரிய சென்ற், அத்தர், வகைகளும் நயமாகப்பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய எங்களிடம் விஜயம் செய்யுங்கள்.

**க. செ. கைலாசப்பிள்ளை அன் சன்ஸ்.**

மருந்துச்சரக்கு வியாபாரம்

76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இப்பொழுதே உங்கள் ஆடர்களை அனுப்புங்கள்!

1962-ம் ஆண்டுக்கு--

# ஆனந்தா திருக்குறள் கலண்டர்கள்

மிகச் சிறப்பான முறையில் தயாராகிக்கொண்டிருக்கின்றன,

ஆனந்தா திருக்குறள் கலண்டர் (No.1)

இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் விசேட தினங்களும், அரசாங்க வங்கி விடுமுறைத் தினங்களும் கொடியேற்றம் தேர்த்திருவிழா முதலியனவும், குருபூஜைத் தினங்களும், பெரியோர்களின் நினைவு தினங்களும், இக்கலண்டரில் கிரமமாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இவை தவிர நாள்தோறும் நட்சத்திரம், யோகம் சுபநேரம், ராகுகாலம் முதலியனவும் பிரம்மஸ்ரீ இரகுநாதையரவர்களின் வாக்கிய கணிதப்படி குறிக்கப்பெற்றுள்ளன.

அன்பளிப்புச் செய்வதற்கு ஏற்ற

ஆனந்தா அறிவுரைக் கலண்டர் (No, 2) ஆனத்தா மூன்றுதேதிக் கலண்டர் (No. 3)

ஆனந்தா வாரக்கலண்டர் (No. 4) ஆனந்தா ரேல் கலண்டர் (No.5)

ஆகியவைகளும் தயாராகின்றன.

விபரங்களுக்கு இன்றே எழுதுங்கள்!

**ஆனத்தா அச்சகம்,** 226, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 318. தந்தி: 'அச்சகம்'